www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1 - 31 ஜனவரி '89

4 4-5

விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# பாசிச காங்கிரசின் படுகொலை அரசியல்



ச.்.ப்தார் ஹஷ்மியின் படுகொலையைக் கண்டித்து கலைஞர்கள், அறிவு ஜீவிகள், பத்திரிக்கையாளர்கள் டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம். உள்ளே: ச.்.ப்தார் ஹஷ்மி.

ச.்.ப்தார் ஹஷ்மி - பிரபல வீதி நாடகக் கலைஞர்; பத்திரிக்கையாளர்; 'மார்க்சிஸ்ட்' கட்சியின் செயல் வீரர்; ஜன நாட்டிய மஞ்ச் என்ற நாடகக் குழுவின் அமைப்பாளர். உ.பி.யில் காசியா பாத் நகராட்சித் தேர்தலில் மார்க்சிஸ்ட் வேட்பா ளரை ஆதரித்து வீதி நாடகங்களை நடத்தி வந்தார். புத்தாண்டு தினத்தில் ஷாகிபாபாத் நகரில் கலை நிகழ்ச்சி நடத்த தீர்மானித்தி ருந்தார்.

ஏற்கனவே வி.பி.சிங்கின் வெற்றிக் குப் பிறகு மக்களிடமிருந்து தனிமைப்பட்டு கிடக்கும் காங்கிரசு கும்பலுக்கு தோல்வி பயத்தால் வெறிபிடித்தது. ஷாகிபாபாத் நகரில் நிகழ்ச்சி துவங்கும் நேரத்தில், லாரிக ளில் பயங்கர ஆயுதங்களுடனும் துப்பாக் கிகளுடனும் குண்டர் படையுடன் வந்திறங் கிய காங்கிரஸ் வேட்பாளனாகிய முகேஷ் சர்மா என்ற ரௌடி, நாடகக் கலைஞர்கள் மீது கொலை வெறித்தாக்குதலைக் கட்டவி ழ்த்து விட்டான். தப்பியோடிய கலைஞர்களை குண்டர்படை விரட்டிச் சென்று தாக்கியது. அருகிலிருந்து சி.ஐ. டி.யு. தொழிற்சங்க அலுவலகத்திற்குள் ஓடிய கலைஞர்களை தாக்க வந்த குண்டர்க ளைத் தடுத்த ச.்.ப்தார் ஹஷ்மி மிருகத னமாக தாக்கப்பட்டார். குண்டர்கள் நடத் திய துப்பாக்கிச் சூட்டில் கலை நிகழிச் சியைக் காண வந்த ஒருவர் அங்கேயே மாண்டுபோனார்.

ரத்தம் சொட்டச்சொட்ட அருகிலுள்ள போலீஸ் நிலையத்திருச் சென்று இது பற்றி புகார் கொடுத்த, நாடகக்குழுவைச் சேர்ந்த பிஜேந்திர்சிங் என்பவரை போலீ சாரே கொடூரமாகத் தாக்கினர். போலீசு கும்ப லின் ஆசியுடன் காங்கிரசு குண்டர்படை பட்டப்பகலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் நடத்திய இக்கொலை வெறியாட்டத்தில் பத்துக்கும் மேற்பட்ட நாடகக் கலைஞர்கள் படுகாய முற்றனர். குற்றுயிரும் கொலையுயிருமாக டெல்லி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நாடகக்கலைஞர் ச.்.ப்தார் ஹஷ்மி அடுத்த நாளே மரணமடைந்தார்.

இது ஏதோ ஓட்டுப் பொறுக்குவதில் ஏற்பட்ட போட்டா போட்டியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவமாகச் கருத முடியாது. சமீப காலமாகவே காங்கிரசு மந்திரிகளும் பெரும் புள்ளிகளும் படுகொலை அரசி யலை ஆதரித்தும் வெறியூட்டியும் வருகின் றனர். பாசிச ராஜீவ் கும்பலின் மே.வங்க குண்டர் படைத் தளபதியான கானிகான் சௌத்திரி, மே.வங்க அரசுக்கு எதிராக காங்கிரசு தொண்டர்கள் துப்பாக்கி வைத்துக் கொள்ளச் சொல்லி அறிவுறுத்துகி றார். சமீபத்தில் ஆந்திராவில் காங்கிரசு எம்.எல்.ஏ கொல்லப்பட்டதைத் தொடர்ந்து சிவசங்கர் வெளிப்படையாகவே காங்கிரசு குண்டர்களுக்கு வன்முறை வெறியூட்டி கலவரத்தை முன்நின்று நடத்தியுள்ளார்.

சுருக்கமாகக் கூறினால் படுகொலை அரசியலை ஏந்திக் கொண்டு, கொலை காரர்கள் - பயங்கரவாதிகளின் கூடாரமாக காங்கிரசு கட்சியும் ஆட்சியும் வேகமாக முன்னேறி வருகிறது. இப்படித் தான் படுகொலைப் படையைக் கட்டியமைத்துக் கொண்டு உலகெங்கும் பாசிஸ்டுகள் தங்கள் ஆட்சியை நிறுவி, நீடிக்கிறார்கள் என்பது வரலாற்று அனுபவம். 'மார்க்சிஸ டுகள்' கனவு காண்பது போல நாடு தழு விய கண்டன ஆர்ப்பாட்டங்கள் மூலமோ, தேர்தலில் காங்கிரசை வீழ்த்துவதன் மூலமோ பெருகி வரும் படுகொலை அரசி யலையும், பாசிச அபாயத்தையும் முறிய டித்துவிட முடியாது. தேசத்தைக் கவ்வி யுள்ள இப்பேரபாயத்தை பாட்டாளி வர்க்கத் தலைமையிலான ஆயுதமேந்திய புரட்சிப் போராட்டங்களின் மூலமே முறி யடிக்க முடியும்.

## 'தேசிய மாற்று'களின் முகவிலாசம்

ஓட்டுக் கட்சிகளுக்குள்ளே நடக்கும் கோஷ்டி சண்டைகள் சில சமயங்களில் அவர்களது வண்டவா ளங்களை வெளிக்கொண்டு வந்து விடுகின் றன.

ஜனதா தளக் கட்சியின் அதிருப்தி கோஷ்டியின் முக்கிய புள்ளி சுப்பிரமணிய சாமி. எதிர்கட்சி கூட்டணியில் வி.பி.சிங் செல்வாக்கு பெறுவதை வெறுப்பவர். எனவே எதிர்க்கட்சி தலைவர்களின் ரகசிய ஸ்விஸ் வங்கிக் கணக்கு விபரங்களைச் சேகரித்து அவர்களை மிரட்டிப் பணிய வைக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கி யுள்ளார்.

'வி.பி.சிங், ராஜீவ் அரசில் நிதி மந்தி ரியாக இருந்த போது பேர்பாக்ஸ் துப்பறி யும் நிறுவனம் மூலம் 16 எதிர்க் கட்சித் தலைவர்களின் ஸ்விஸ் வங்கிக் கணக்கு விபரங்களை ரகசியமாக சேகரித்துள்ளார். அந்த விபரங்களை எனக்குத் தர வேண் டும்' என்று கேட்டு நிதித் துறை செயலாளர் வெங்கிடரமணனின் உதவியை நாடினார். சுப்பிரமணிய சாமி ஐந்தாம் படை வேலை செய்வதைக் கண்ட மகிழ்ச்சியில் அவருக்கு எல்லா உதவிகளையும் செய்ய ராஜீவ் கும் பல் நிதித் துறை செயலர் மூலம் ஏற்பாடு செய்துள்ளது. இதுவும் போதாதென்று ரகசிய உலகப் பேர்வழியான சந்திராசாமி மூலம் விபரங்களைச் சேகரிக்க இப்போது சுப்பிரமணிய சாமி வெளிநாடுகளில் பறந்து கொண்டிருக்கிறார்.

இதையறிந்த எதிர்கட்சி வழக்கறிஞ ரான ராம் ஜெத்மலானி தனக்கும் இவ்வாறு விபரங்களைத் தர வேண்டுமென்று ராஜீவ் அரசிடம் கோரியுள்ளார். போபர்ஸ் விவகாரத்தில் கமிஷன் பெற்ற ஸ்வென்ஸ்கா நிறுவனத்துக்கும், காங்கிரசு எம்.பியும் ராஜீவின் நெருங்கிய கூட்டாளி யுமான சதீஷ் சர்மாவுக்கும் தொடர்பு உள் ளதை உறுதிப்படுத்த இந்த விபரங்கள் தேவை என்று கேட்டுள்ளார்.

ராஜீவால் குலைக்கும் நாயாக வர் ணிக்கப் பட்ட இவர், போபர்ஸ் கொள்ளை யரான இந்துஜாக்களின் அறக்கட்டளையில் இப்போது அங்கம் வகிப்பதால் எலும்பைக் கடிக்கும் நாயாக அடங்கி விட்டார். போபர்ஸ் விவகாரத்தில் நடந்த பேரங்கள் பற்றி இந்து பத்திரிக்கை வெளியிட்ட ஆவ ணங்களும் ஆதாரங்களும் பொய்யானது என்று இப்போது பொருத்தமாகவே குரைக் கிறார்.

எதிர்கட்சிகளின் ஐக்கியம் நீடிக்கி றதோ, இல்லையோ! ஆனால் அதற்கு முன்னே அதை உடைப்பதற்குக் கிளம்பி யுள்ள அதிருப்தியாளர்கள் கடைசியில் ராஜீவின் காலை நக்கத் தொடங்கி விட்ட னர். நேற்று ஹெக்டேவை வீழ்த்த ராஜீவ் கும்பலிடம் ரகசியமாக உதவியைப் பெற் றார் ஜனதா தள தலைவர் சந்திரசேகர். இன்று ஜெத்மலானியிலிருந்து சுப்பிரம ணிய சாமி வரை ஒரு பெரிய கும்பலே சோரம் போயுள்ளது. இந்த லட்சணத்தில் இவர்கள் வரும் பொதுத் தேர்தலில் ராஜீவ் அரசை வீழ்த்தப் போவதாக குளுரைப்பது. நல்ல வேடிக்கை!



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

4-5

1 - 31 ஜனவரி '89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : U S $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!

தமிழக சட்டமன்றத்துக்கான ஒன்பதாவது தேர்தல்கள், செயற்கையான அரசியல் சூடேற்றிக் கொண்டிருக்கின்றன ஓட்டுக் கட்சிகளும் பத்திரிக்கைகளும். எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிட்டாமல் போனால் அரசியல் அனல் பறக்கச் செய்து விடுவார்கள்.

மக்கள் பலமுறை தமது சொந்த வாழ்க்கை அனுபவங்களில் இருந்து, ''இனிமே யாரையும் நம்ப முடியாது! யாருக்கும் ஓட்டுப் போடக் கூடாது! எல்லோரும் அயோக்கியர்கள் தான்!'' என்கிற முடிவுக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். இருந்தபோதும், அதையெல்லாம் மறந்துவிட்டு வாக்குச் சாவடிகளுக்கு அவர்களை இழுத்துப் போக, கொஞ்சமும் தயக்கமின்றி ஏராளமான - பொய்யான வாக்குறுதிகளை அடுக்கி பதவி எச்சிலையைக் கவ்விக் கொள்ள மூர்க்கமான நாய்ச் சண்டையில் இறங்கியுள்ளன எல்லா ஓட்டுக் கட்சிகளும்.

ஓட்டுக் கட்சிகள் அடிக்கும் ஆபாச - அராஜகக் கேளிக் கூத்துகளையும், அவர்கள் செய்யும் பித்தலாட்டம் மோசடிகளையும் இனி மேலும் நியாயப்படுத்தவே முடியாது என்று முதலாளித்துவ ஜனநாயகத்துக்கு வக்காலத்து வாங்கும் ''நடுநிலையாளர்கள்'' அனைவரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனாலும் ''தேர்தல்கள் ஜனநாயகத்தின் முக்கியமான அங்கம். ஓட்டுப் போடுவது மக்களின் அடிப்படை உரிமை - கடமை. ஆகவே தவறாது வந்து வாக்களியுங்கள்; தகுதியானவர்களை எடை போட்டு வாக்களியுங்கள். கள்ள ஓட்டுப் போட்டு விடுவார்கள்; அதிகாலையிலேயே வந்து வாக்களியுங்கள்'' என்று மக்களுக்கு உபதேசம் செய்கிறார்கள்.

டெல்லி பெருந்தேசிய இன ஒடுக்கு முறையாளர்களை விரட்டுவதற்கு இது ஒரு வாய்ப்பு; எனவே திராவிடக் கட்சிகளுக்கு வாக்களியுங்கள் என்கிறார்கள் பல்வேறு தமிழ் இன வாதிகள். ஜாதி - மதவெறியர்களை முறியடிக்க, ஊழல் பேர்வழிகளை ஒழித்துக் கட்ட பிற்போக்கு அல்லது எதேச்சதிகார அல்லது பாசிச சக்திகளை வீழ்த்துவதற்கு இது ஒரு வாய்ப்பு; எனவே அவர்களுக்கு எதிராக வாக்களியுங்கள் என்று வருந்தி - வலிந்து அழைக்கிறார்கள் பல்வேறு வகைப் போலிக் கம்யூனிஸ்டுகள்.

''எங்கள் ஜாதிக்கு இட ஒதுக்கீடு தர மறுக்கிறார்கள்; எனவே இந்தத் தேர்தலைப் புறக்கணியுங்கள்'' என்கிறார்கள் வன்னியர் சங்கத்தினர். இதே போல தங்கள் ஜாதிக் கோரிக்கைகளை முன் வைத்து கடந்த சில தேர்தல்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள்-சங்கத்தினரும் புறக்கணித்தனர். ''எங்கள் ஊருக்கு இந்த வசதி இல்லை; எனவே தேர்தலைப் புறக்கணிக்கிறோம்'' என்று சில தன்னெ முச்சியான மறுப்புகளும் தோன்றுகின்றன. இந்தக் காரணங்களுக்காக தேர்தல்களைப் புறக்கணிப்பவர்கள் கூட அதை ஒரு நிர்ப்பந்த உத்தியாகக் கையாண்டு தமது கோரிக்கைகளை அடைந்துவிட முடியும் என்றே நம்புகிறார்கள். இவர்களுடனும் பேரங்கள் நடத்தி சில சலுகைகளைக் கொடுத்து முடிந்த அளவு தேர்தல்களில் பங்கேற்க வைப்பதற்கு அரசு அதிகாரிகளும் ஓட்டுக் கட்சிகளும் முயலுகின்றன.

மேற்சொன்ன பல்வேறு பிரிவினரின் வார்த்தைகளும், நோக்கங்களும் வேறு வேறானவையாக இருக்கலாம். ஆனால் இவர்கள் அத்தனை பேரும் ஏதாவது ஒரு வகையிலே, ஏதாவது ஒரு அளவிலே தேர்தல்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று நம்பிச் செயல்படுகிறார்கள். அதற்கு மாறுபாடாக, முற்றிலும் வேறுபாடாகக் குரல் எழுப்புகிறார்கள், கம்யூனிசப் புரட்சியாளர்கள். ''ஓட்டுப் போடுவதால், மக்களுக்கு ஒரு நன்மையும் கிடையாது! ஓட்டுப் போடுவது - நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் செயல், நமக்கு எதிராக நாமே செய்து கொள்ளும் தீங்கு! ஓட்டுப் போடுவது - அரசியல் பிழைப்புவாதிகள், ஓட்டுப் பொறுக்கிகளின் அட்டகாசங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் தரப்படும் அனுமதி; அவர்களின் அதிகார முறைகேடுகளுக்கும் - லஞ்ச ஊழல்களுக்கும் தரப்படும் லைசென்சு -உரிமை! எனவே

யாருக்கும் யாரும் ஓட்டுப் போடாதீர்கள்!
போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!
புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி வகுப்போம்!

தேர்தல், ஓட்டுரிமை - இதை வைத்து தான் நாட்டிலே ஜனநாயகம் -மக்களாட்சி நடப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ''ஜனநாயகம் என்றால் மக்கள் அதிகாரம். முடியரசர்கள், எதேச்சதிகாரர்கள், இராணுவ சர்வாதிகாரிகள், நாஜிக்கள் - பாசிஸ்டுகள் போன்ற ஆட்சி அல்ல.


படிப்பகம்

www.padippakam.com



மக்களால் மக்களுக்காக மக்களே ஆளுவது தான் மக்கள் ஆட்சி என்று இதன் மகத்துவத்தைப் பற்றி பறையடிக்கிறார்கள்.

ஜனநாயகம் - மக்களாட்சி என்றால் இதிலே மக்களுக்கு என்ன ஆட்சி உரிமை இருக்கிறது? அரசு நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிட்டு தங்களுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவோ, லஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகளில் ஈடுபடுவோரைத் தண்டிக்கவோ, தங்களுக்குத் தேவையான ஏற்பாடுகளைத் தாங்களே செய்து கொள்ளவோ மக்களுக்கு ஏதாவது அதிகாரம் இருக்கிறதா? எதுவுமே கிடையாது! இந்த ஜனநாயகத்திலே மக்களுக்குள்ள ஒரே ''பங்கு -உரிமை - அதிகாரம்'' எல்லாம் ஓட்டுப் போடுவது ஒன்று மட்டும் தான். அதோடு சரி; வேறு எதுவும் கிடையாது.




ஓட்டுப் போடுவது உண்மையில் ஓர் உரிமையா? வேலை தருவதாகச் சொல்லி கொத்தடிமைகளிடம் கடன் பாண்டு - பத்திரங்களிலே எழுதி வாங்கிக் கொள்கிறான் பண்ணையார். அப்புறம் அவர்களைக் கசக்கிப் பிழிந்து ஒட்டச் சுரண்டி ஒடுக்குவதற்கு அதைப் பயன்படுத்துகிறான். போலீசு நிலையங்களிலே உருட்டி மிரட்டி, சித்திரவதை செய்து அப்பாவிகளிடம் வெள்ளைத் தாளிலே கையொப்பம் வாங்கிக் கொள்கிறான் அதிகாரி. அப்புறம் அதிலே என்ன வேண்டுமானாலும் எழுதிக் கொண்டு லஞ்சம் பிடுங்குகிறான் அல்லது தண்டிக்கிறான். அதைப் போல, பாண்டு -பத்திரங்களிலோ வெற்றுத் தாள்களிலோ கையொப்பம் வாங்கிக் கொள்வதைப் போலத்தான் ஓட்டு வாங்கிக் கொள்வதும். அப்புறம் கோடி கோடியாக வரி போட்டு மக்களை வாட்டி வதைக்கவும், லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், ஆபாச உல்லாச ஊதாரி வாழ்க்கை வாழவும், அடிப்படைத் தேவைகளுக்காக மக்கள் போராடினால் அடக்கி ஒடுக்கவும், கருப்புச் சட்டங்களை ஏவி நாட்டையே திறந்த வெளி சிறைச்சாலைகளாக்கவும் - இப்படி சகல சர்வாதிகாரத்துக்கும் தரப்படும் ஆதாரம் - நியாய உரிமையாகவே மக்கள் ஓட்டுப் போட்டுள்ளதாக ஆளுகிறார்கள்.

நேரடியாக மக்களே அதிகாரம் வைத்துக் கொண்டு ஆட்சி நடத்த முடியாது; மக்களுடைய பிரதிநிதிகள் மூலமாகத் தான் ஆள முடியும் என்று ஜனநாயகத்துக்கு விளக்கம் கொடுக்கிறார்கள். சரி! மக்கள் பிரதிநிதிகள்என்றுசொல்லிக்கொள்ளும் எம்.எல்.ஏ, எம்.பி.க்கள் மந்திரிகளிடம் போய் தங்களுக்கு அளித்த தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றச் சொல்லி நிர்பந்திக்கவோ, அவர்களுடைய குற்றங்களுக்காகத் தண்டிக்கவோ, அவர்களுடைய பதவிகளைப் பறிப்பதற்கோ, அவர்கள் போடும் சட்ட திட்டங்களுக்கு மக்களிடம் ஒப்புதல் வாங்க வைப்பதற்கோ வாக்காளப் பெருமக்களுக்கு ஏதாவது அதிகாரம் இருக்கிறதா? கிடையாது.

மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் எம்.எல்.ஏ., எம்.பி.க்களுக்காவது எந்த அளவு அதிகாரம் இருக்கிறது? நேரடியாக அரசு நிர்வாகத்தைக் கையிலெடுத்துக் கொள்ளவோ, அரசு நிர்வாகத்தில் தலையிடவோ அவர்களுக்கும் உரிமை கிடையாது. சட்ட மன்றங்கள் -நாடாளுமன்றத்திலே சில சட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காகக் கைதூக்குவதைத் தவிர, அதிகாரிகளோடு சேர்ந்து கூட்டுக் கொள்ளையடிப்பதைத் தவிர அவர்களுக்கும் வேறு எந்த உரிமையும் கிடையாது.

எல்லா சட்ட திட்டங்களையும் தயாரித்துக் கொடுப்பதும், அவை நிறைவேறிய பிறகு தங்கள் வசதி -விருப்பத்துக்கேற்ப அமுலாக்குவதும் ஆகிய அரசு நிர்வாக உரிமை - அதிகாரம் உள்ளவர்கள் அதிகாரிகள் தான். அதனால் தான் அவர்களுக்கு அதிகாரிகள் என்று பெயர். ஆட்சி நடத்துவதே அதிகாரிகள் தான். வட்டாட்சியாளர், கோட்டாட்சியாளர், மாவட்ட ஆட்சியாளர், அரசு செயலாளர், அரசு இயக்குநர், எல்லாம் அதிகாரிகள் தானே தவிர மக்களாட்சி என்கிற அடிப்படையில் மக்களில் எவரும் ஆள்வதில்லை.

அரசியல் என்பது என்ன? அரசு பற்றிய விவகாரம் தான் அரசியல். அரசு நிர்வாகம் யாரால் நடத்தப்படுகிறது? அரசு நிர்வாக எந்திரமான அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதி மன்றம் போன்ற அமைப்புகளைப் பற்றியது தான் அரசியல். இந்த அரசுக்குப் பொறுப்பேற்று இயக்கும் அவர்களுக்கு என்னென்ன அதிகாரம் இருக்கிறது? எப்படி அதிகாரம் செலுத்துகிறார்கள்? மக்களுக்குச் சாதகமாகச் செயல்படுகிறார்களா? இல்லையா? உண்மையிலேயே மக்களுக்கான அதிகாரம் எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும்? அதை எப்படி உருவாக்குவது என்பதெல்லாம் தான் அரசியல்.

ஆனால் தேர்தல் சமயங்களிலும் நாடாளுமன்றம் -சட்டமன்றங்களிலும் இந்த ஓட்டுக் கட்சிகள் அடிக்கும் ஆபாச உல்லாச வக்கிர கோமாளித்தனங்களே அரசியல் என்பதாக மக்களின் கவனத்தை குவிக்கிறார்கள்.

திரை மறைவிலே இருந்து கொண்டு அரசு என்னும் ஆயிரங்கால் பூதத்தின் காலும் கையுமாக, கண்ணும் காதுமாக, மூக்கும் மூளையுமாக, இருந்து கொண்டு ஆளுகிறார்கள் அதிகாரிகள். சட்டசபைகளும், நாடாளுமன்றமும், தேர்தல்களும் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அதிகாரிகளின் ஆட்சி நடக்கும். ஆனால் அதிகாரிகளின் கூட்டம், அது இயக்கும் அரசு எந்திரம் இல்லாமல் நிர்வாகம் நடக்கவே முடியாது.

ஆனாலும் இந்த நாடாளுமன்றமும் சட்ட மன்றங்களும் எதற்காக நடத்தப் படுகின்றன? ''நடப்பது அதிகாரிகள் ஆட்சி அல்ல; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நடத்தும் மக்களாட்சி'' என்கிற மயக்கத்தை




படிப்பகம்

www.padippakam.com

ஏற்படுத்துவதற்காகத் தான்! ஜனநாயகம் -மக்களாட்சி என்கிற மோசடி நாடகத்துக்குப் பின்னே யாருடைய ஆட்சி - நிர்வாகம் எப்படி நடக்கிறது என்கிற உண்மை மூடி மறைக்கப்படுகிறது. அதே போல யாருடைய நலன்களுக்காக இந்த மோசடி நாடகம் நடக்கிறது என்கிற உண்மையும் மூடி மறைக்கப் படுகிறது.

அதாவது, அந்நிய -ஏகாதிபத்திய -ஏகபோக முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு இந்த நாட்டை ஒட்டச் சுரண்டும் தரகு அதிகார முதலாளிகள்; ஏராளமான, வளமான நிலங்களைக் குவித்துக் கொண்டு இந்த நாட்டுக் கூலி, ஏழை, குத்தகை விவசாயிகளை ஒட்டச் சுரண்டும் நிலப் பிரபுகள் -ஆகி



யோரின் சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் பாதுகாப்பதற்குத் தான் ஒட்டுப் பொறுக்கிகள் இவ்வளவு நாடகம் போடுகிறார்கள். அதிகாரிகள் இவ்வளவு அக்கிரமங்களும் செய்கிறார்கள். ஆகவே இது போலி ஜனநாயகம். தரகு அதிகார வர்க்க முதலாளிகள் நிலப்பிரபுக்களின் சர்வாதிகாரம்.

தரகு அதிகார முதலாளிகளுக்குள்ளேயே அசுர வேகத்தில் வளர்ந்து வரும் புதியவர்களான அம்பாணி, இந்துஜா, சபிரியா, கோயங்கா ஆகியோருக்கும் பழையவர்களான டாடா, பிர்லா, மஃபத்லால், மோடி, கைத்தான், வாடியா ஆகியோருக்கும் இடையிலான முரண்பாடுகள், நிலப்பிரபுகளுக்குள்ளேயே பஞ்சாப், அரியானா, மேற்கு உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் புதிய நவீன விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நிலப்பிரபுக்களுக்கும் பழைய நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் - இந்த முரண்பாடுகள் அவர்களின் பிரதிநிதிகளுக்கிடையிலான பகிரங்க மோதலாக - பதவிச் சண்டையாக வெடித்துள்ளது.

போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகம் காரணமாக விவசாயிகள் - தொழிலாளர்கள் இயக்கங்களும், புரட்சிப் போராட்டங்களும் மந்தமாக இருந்தபோதும், தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்களும், தேசிய இனங்கள் - பிராந்திய மக்களின் உரிமைப் போராட்டங்களும்,ஜாதி - மதவெறிச் சக்திகளின் கலவரங்களும் கட்டுப்படுத்த முடியாதவாறு கிளம்புகின்றன. மக்கள் போராட்டங்களையும், அரசியல் எதிரிகளையும் ஒடுக்குவதற்காக பல பாசிச அடக்குமுறை நடவடிக்கை -கருப்பு சட்டங்களை ஏவி விடுகிறது ஆட்சியிலுள்ள ராஜீவ் கும்பல். இறுதியாக பாசிச ஆட்சியை நிறுவுவதற்கான சதிகளிலும் தயாரிப்பிலும் ஈடுபட்டிருக்கிறது.

பாசிச ராஜீவ் கும்பலுக்கு மாற்று சக்தியாகக் கூறிக் கொள்ளும் ஜனதா தளம் மற்றும் தேசிய முன்னணி அவற்றுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ளப் போட்டி போடும் போலிக் கம்யூனிஸ்டுகள் மற்றும் பாரதீய ஜனதா ஆகிய எதிர் தரப்பும் கூட உதட்டளவிலேயே ஜனநாயக உரிமைக்கான குரல் எழுப்புகின்றனர். மக்களைத் திரட்டி வலுவான இயக்கங்கள் நடத்துவதில்லை. ஏனெனில் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் நிலப்பிரபுக்களுக்கு ஊழியஞ் செய்வதற்காக பல்வேறு ஜனதாக் கலவைகளும் பாசிசத்தைக் கொண்டு வரத் தயங்காது. 1977-80 ஆகிய குறுகிய காலத்தில் ஆட்சியிலிருந்த போதும் பல 'மினி மிசா''க்களைப் போட்டதோடு, மீண்டும் மிசா சட்டம் கொண்டு வர முயன்றவர்கள்தான் இவர்கள். உள் முரண்பாடுகள் - பதவிச் சண்டை காரணமாக அது நடக்காமல் போனது. ரஷ்ய சமூக ஏகாதிபத்திய வல்லரசின் எடுபிடிகளான போலிக் கம்யூனிஸ்டுகள் ஐந்தாம் படையாக இருந்து பாசிச கும்பலுக்குத் துணை போகும் வகையிலேயே செயல்பட்டு வருகின்றனர்.

இன்றைய தமிழகத் தேர்தல்களிலே, பாசிச ராஜீவ் கும்பலுக்கு எதிராகப் போட்டியிடும் மூன்று அணிகளும் அரசியல் பிழைப்புவாதக் கட்சிகளால் தலைமை தாங்கப்படுகின்றன. இவை எந்தச் சமயத்திலும் தமது வசதிக்கேற்ப பாசிச சக்திகளுடன் கை கோர்த்துக் கொள்ளக் கூடியவை. இவற்றின் பிழைப்புவாத மற்றும் பொறுக்கி அரசியல், சமூக, அமைப்பு முறையும் கொள்கைகளுமே பாசிச தன்மையுடையன.

படர்ந்து வருகிறது பாசிச அபாயம். பாசிசத்துக்கு சமூக அடிப்படையையும், அரசியல் தலைமையையும் தேடித்தருவதுதான் ஆளும் வர்க்கக் கட்சிகள். மற்றபடி பாசிசத்தின் ஊற்று மூலமாக அதிகார மையமாக இருந்து இயங்குவது அரசு எந்திரம். தேர்தல்களைப் பயன்படுத்திக் கொண்டு, ஓட்டுப் போடுவதன் மூலம் அதை மாற்றி விடவும் முடியாது; தடுத்து விடவும் முடியாது. தனது நேரடிப் பாசிச ஆட்சியை நிறுவுவதற்குத் துடித்துக் கொண்டிருக்கும் அரசு எந்திரத்தை அதன் அரசியல் தலைமையோடு சேர்த்துத் தூக்கி எறிவதே இன்று மக்கள் முன் உள்ள கடமை. ஆயுதப் போராட்டம் உட்பட பல்வேறு புரட்சிகர மக்கள் திரள் போராட்டங்கள் மூலமே அக்கடமையைச் செய்திட முடியும். ஆகவேதான் முழங்குகிறோம்:

படரும் பாசிசஅபாயத்தை முறியடிப்போம்!

போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!

புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிவகுப்போம்!



படிப்பகம்

www.padippakam.com

# பொறுக்கி அரசியல் ரௌடிகளின் காலடியில் நாடாளுமன்ற ஜனநாயகம்

200 கோடி ரூபாய் மதிப்புள்ள பொதுச் சொத்துக்கள் அழிக்கப்பட்டு, 78 பேர் படுகொலை செய்யப்பட்டு, ஒரே நாளில் 450 பேருந்துகள் தீக்கிரையாக்கப் பட்ட டிசம்பர் 26; ஆந்திர - விஜயவாடா நகர மக்களின் ரத்தத்தில் தோய்ந்து உதித்த நாள்! ஆந்திர மாநில விஜயவாடா நகரத் தின் குண்டர் படை தலைவனும், பணத்துக்காக பல கொலைகள் புரிந்த கிரி மினல் குற்றவாளியும், ஆந்திர சட்டமன்ற இ.காங்கிரசு உறுப்பினருமான மோகன ரங்காராவ் தனது தொழில் முறை மற்றும் அரசியல் எதிரிகளான என்.டி.ராமாராவின் தெலுங்கு தேசக் கட்சி குண்டர்களால் டிசம் பர் 26ம் தேதி விடியற்காலை அவரது இரண்டு அடியாட்களுடன் உடல்வேறு, தலை வேறாக வெட்டிக் கொல்லப்பட்டார். செய்தியறிந்த மோகன ரங்காராவின் அடி யாட்கள், காங்கிரசுக் குண்டர்கள் சில மணி நேரத்தில் விஜயவாடா நகரத்தையே தீக்கி ரையாக்கினர். அந்நகரமே சிறிது நேரத்தில் சிறுசிறு துண்டுகளாக வெட்டிச் சிதைக்கப் பட்டு ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட் டது.

தனது தொழில் துறை மற்றும் அரசி யல் எதிரிகளை தொடர்ச்சியாக குரூரமான முறையில் பகிரங்கமாக வெட்டிக் கொன்று கேள்விக்கிடமற்ற வகையில் ஆந்திர மாநி லத்தின் மிகப் பெரும் குண்டர் படைத் தலைவனாக வளர்ந்து காங்கிரசுக் கட்சி யின் தலைவனாக உருவெடுத்தவன் தான் மோகனரங்காராவ். ஏறக்குறைய கடந்த 30 ஆண்டு காலமாக ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளால் குறிப்பாக இ.காங்கிரசின் மாநி லத் தலைமையில் நேரிடையாக ஊட்டி வளர்க்கப்பட்ட மோகன ரங்காராவ், சமீப காலமாக மரண பயத்திலேயே வாழ்ந்தான்.

அவனது தொழில் முறை எதிரிகள் தெலுங்கு தேசக் கட்சியிலும், ஆட்சியிலும் பலம் பொருந்தியவர்களாக மாறியது அவனை மிகவும் அச்சுறுத்தியது. இக்கும்ப லிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள அவசரமாக சாதிய ரீதியிலான பலத்தில் தஞ்சம் புகுந்தான் மோகன ரங்காராவ். ஆந்திர மாநிலத்தின் வளம் பொருந்திய கடலோரப் பகுதியில் வாழும் காப்பு சாதி யைச் சார்ந்த மோகனரங்காராவ் அச்சாதியி னரை தனக்கு ஆதரவாக திரட்டுவதில் வெற்றி கண்டான். கம்மா சாதியைச் சேர்ந்த அவனது தொழில் முறை எதிரிகளான தெலுங்கு தேசத் தலைவர்களுக்கு மோகன ரங்காவின் சாணக்கியத்தனம் பெரும் சவா லாய் அமைந்தது. மோகனரங்காராவை அழித்தொழித்தால் தான் அப்பகுதியில் தங்களுடைய அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள முடியும், தெலுங்கு தேசக் கட்சியி லும் தங்களுடைய மதிப்பு உயரும் என்று கணக்கு போட்டு காரியத்தில் இறங்கினர், தெலுங்கு தேசக் கட்சியின் குண்டர்கள். எதிரிகளின் எதிர் தாக்குதலை அறிந்த மோகனரங்காராவ் தனது உயிரையும், உட மையையும் பாதுகாத்துக் கொள்ள, தன்னை மேலும் பிரபலப்படுத்திக் கொள்வ திலும், ஆந்திர மக்களின் அனுதாபத்தைப் பெறுவதிலும் கவனம் செலுத்தினான்.

ஆந்திர மாநிலத்தின் காங்கிரசு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு தெலுங்கு தேச ஆட்சி பாதுகாப்புத் தர தவறுவதாக அறிக்கை வெளியிட்டு, அதற்காக தன்னு டைய தலைமையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தான் மோகன ரங்காராவ். விஜயவாடா நகரத்தின் மைய பகுதியிலுள்ள தன்னுடைய வீட்டின் சுற்று சுவர்களுக்குள்ளேயே உண்ணாவிரத மேடை அமைத்து தனது ஆதரவாளர்கள், அடியாட்களுடன் டிசம்பர் 22ந் தேதி உண் ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தான் மோகனரங்காராவ். உயிருக்கு பாதுகாப்புக் கேட்டு போராடிய உண்ணாவிரத பந்த லியே, 26ந் தேதி விடியற்காலை நூற்றுக் கும் மேற்பட்ட தெலுங்கு தேசக் குண்டர்க ளால் சுற்றி வளைக்கப்பட்டு அவனது முறையிலேயே குரூரமான முறையில் உடல்வேறு தலை வேறாக வெட்டிக் கொல்லப்பட்டான்.

'ரத்தத்திற்கு ரத்தம்' என்று எதிர் தாக்குதலில் இறங்கிய காங்கிரசு குண் டர்கள் தொடர்ந்து 3 நாட்கள் விஜயவாடா நகரத்தை மட்டுமல்ல, காப்பு சாதியினர் அதிகமுள்ள நான்கு மாவட்டங்களையே பிணக்காடாக்கினர். தீ வைப்பு, சூறையா டல், கண்ணில் கண்டவர்களை வெட்டிக் கொல்வது என பேயாட்டம் போட்டனர். காப்பு சாதியினர் அதிகமுள்ள ஆந்திர மாநி லத்தின் கடலோர பகுதிகளான நெல்லூர், குண்டூர், கிருஷ்ணா, கிழக்கு மற்றும் வடக்கு கோதாவரி மாவட்டங்களின் கிரா மப் புறங்கள் வரை வன்முறையைக் கட்ட விழ்த்து விட்டு பெரும் சாதிய கலவ ரங்களை விசிறி விட்டது காங்கிரசு கட்சி.

அரசு அலுவலகங்கள், பேருந்துகள், வானொலி நிலையம், அரசு பொது மருத்து வமனை, பெட்ரோல் நிலையங்கள், சினிமா தியேட்டர்கள், சிறு கடைகள் என அனைத்தையும் அடித்து நொறுக்கி தீயிட்டு கொளுத்தியது காங்கிரசு குண்டர் பட்டா ளம். படுகொலை செய்யப்பட்ட மோகன ரங்காராவின் உண்மை வரலாற்றை வெளி யிட்ட 'ஈநாடு', 'நியூ டைம்ஸ்' பத்திரிகை அலுவலகங்கள் முற்றிலுமாக தீக்கிரை யாக்கப்பட்டது. தெலுங்கு தேசக் கட்சியின் பகுதி தலைவர்கள், கம்மா சாதியைச் சேர்ந்த அப்பாவி மக்களின் உடமைகளை குறிவைத்து தாக்கியது காங்கிரசு ரௌடிக் கூட்டம்.

விஜயவாடா நகரத்தில் ஏற்கனவே முகாம் அடித்திருந்த காங்கிரசின் மத்திய மனிதவள மந்திரி பி.சிவ்சங்கர், கலவரங்க ளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வை யிடுவது என்ற பெயரில் அவசர அவச ரமாக டில்லியிலிருந்து தனி விமானத்தில் வந்திறங்கிய மத்திய மந்திரிகளான ஷீலா தீட்சித், மோஷினா கித்வாய், சீத்தாராம் கேசரி, காங்கிரசு கட்சியின் பொதுச் செய லாளர் குலாம் நபி ஆசாத் போன்ற தலை வர்களுடன் சேர்ந்து சாதீய கலவரங்களைத் தூண்டும் பேச்சுக்களையும், அறிக்கைகளை யும், தீர்மானங்களையும் சரஞ்சரமாக வெளியிட்டு சாதீய வெறியை பெரிய அள வில் விசிறி விட்டு வன்முறைக்கு வக்காலத்து வாங்கினார்கள். தெலுங்கு தேச ஆட்சியை எதிர்த்து வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம், பேரணி என்று கிளம்பி, ஆந்திர மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை உடனே அமுல்படுத்துமாறு தங்கள் தலை வர் ராஜீவ் காந்திக்கு தந்திமேல் தந்தி அடித் தனர்.

ரத்த வெறி பிடித்தலைந்த காங்கிரசு குண்டர்களை ஒடுக்கத் திரணியற்ற என்.டி.



**பழிக்குப்பழி:** தெலுங்கு தேசக்கட்சி ரௌடிகளால் படுகொலை செய்யப்பட்ட மோகன ரங்காராவ்.




படிப்பகம்

www.padippakam.com

ஆர். அரசு, அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரில் பல பத்தாயிரக்கணக்கில் ஆந்திர போலீஸையும், விமானத்தில் இறக்குமதி செய்த பல பத்தாயிரக்கணக்கான துணை ராணுவத்தையும் வைத்து ஆந்திர மக்கள் அனைவரையும் ஒரு வாரத்திற்கும் மேலாக சுற்றி வளைத்து தாக்கியது. 50க்கும் மேற்பட்ட நகரங்களில் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து அன்றாட வாழ்க்கைக்கான பிழைப்புக்கும் மக்களை நகர விடாமல் வீட்டுச் சிறை வைத்தது. ஊரடங்கு மீறப்படும் இடங்களில் கண்டவுடன் சுடுமாறு உத்திரவு பிறப்பித்தது. அரசு மருத்துவமனை உட்பட 45க்கும் மேற்பட்ட இடங்களில் பல ரவுண்டுகள் துப்பாக்கிச் சூடு நடத்தி 21க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை படுகொலை செய்தது ஆந்திர அரசு. 100க்கும் மேற்பட்டவர்கள் துப்பாக்கிச் சூட்டால் படுகாயமடைந்து உயிருக்கு போராடுகின்றனர்.

அப்பாவி பொதுமக்களின் மீது ஆந்திர அரசு கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறையைக் கண்டு கொதித்தெழுந்த விஜயவாடா -கிருஷ்ணலங்கா பகுதியைச் சார்ந்த இளைஞர் ஒருவர், சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தீயணைப்பு வண்டியை துப்பாக்கி சூடு நடத்திக் கொண்டிருந்த நான்கு போலீசார் மீதேற்றி தானும் போலீசின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். அந்த அளவுக்கு என்.டி.ஆர். அரசு வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு பொதுமக்களை நரவேட்டையாடியது.



போலீசின் துணையோடு பொதுச் சொத்தை சூறையாடிய காங்கிரசு குண்டர்கள்.

கவர்ச்சிவாத அரசியலில் ஆந்திர மக்களை அடித்து வீழ்த்தி என்.டி.ராமாராவுக்கு அடுத்த படியாக பெரும் கூட்டத்தை கவரும் காங்கிரசுக் கட்சியின் அரசியல் தலைவனாக உருவெடுத்த மோகனரங்காவின் அரசியல் பிரவேசம் அறுபதாம் ஆண்டுகளில் துவங்கியது. காட்டூர் என்ற சிறு கிராமத்திலிருந்து 3 சகோதரர்களுடன் விஜயவாடாவுக்கு பிழைப்புத் தேடி வந்த மோகனரங்காராவ் ஆரம்பத்தில், சாலையோர சைக்கிள் ரிப்பேர் கடையை ஆரம்பித்து பிழைப்புவாத அரசியலில் நுழைந்தான். பகுதியில் கிளம்பும் சிறு சிறு சண்டை சச்சரவுகளை கட்டைப் பஞ்சாயத்து நடத்தி தீர்த்து வைப்பது, பணியாதவர்களை மிரட்டிப் பணிய வைப்பது என்று ஆரம்பித்த மோகனரங்காவின் 'பொதுச் சேவை' நாளடைவில் ஒரு பிழைப்புவாத அரசியல் தலைவனுக்குரிய அந்தஸ்தத்தைக் கொடுத்தது. இதன் நடுவில் '70 ஆம் ஆண்டுகளில் வலது கம்யூனிஸ்ட் கட்சி சார்பான டாக்சி ஓட்டுநர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கடைசியில் அச்சங்கத் தலைவரைக் கொன்று போட்டிச் சங்கத்தின் தலைவனானான். அதனுடன் கூடவே 'யுனைடட் இன்டிபெண்டன்ட்ஸ்' என்ற மாணவர் சங்கம், 'ராதாமித்ரா மண்டலி' என்ற 'பொதுச்சேவை' அமைப்பு ஆகியவற்றின் தலைவனாக மேலும் பிரபலமானான்.

தேவினேனி சகோதரர்கள் என்றழைக்கப்படும் ராஜசேகர் என்ற நேரு, காந்தி இருவரும் மோகனரங்காராவின் தொழில் கூட்டாளிகளானார்கள். 5 ஆண்டு காலத்திற்குள் '79 ஆம் ஆண்டில் இவர்களுக்குள் 'தொழில்' போட்டி ஏற்பட்டு, காந்தியை மோகனரங்காராவ் வெட்டிக் கொன்றான். அதிலிருந்து ராஜசேகரும், மோகனரங்காராவும் எதிர் எதிர் கோஷ்டிகளின் குண்டர் படை தலைவர்களானார்கள். மோகனரங்காராவின் ஆயுத பலமும் அடியாள் பலமும் மிக விரைவில் அவனுக்கு அரசியல் செல்வாக்கைத் தேடித் தந்தது. கொலைக் குற்றத்திற்காக சிறையிலிருந்து கொண்டே, விஜயவாடா கவுன்சிலர் பதவிக்கு சுயேட்சையாக நின்று வெற்றி பெற்று காங்கிரசு கட்சியின் கவனத்தைக் கவர்ந்தான், மோகனரங்காராவ். 85 ஆம் ஆண்டு ஆந்திர சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு சார்பில் மோகனரங்காராவும், தெலுங்கு தேசக் கட்சி சார்பில் ராஜசேகரும் நின்று வெற்றி பெற்றனர். அதிலிருந்து இருவருக்குமான மோதல் உச்சகட்டத்தை அடைந்து இரு தரப்பிலும் பல படுகொலைகள் நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மோகனரங்காராவ் தெலுங்கு தேசக் கட்சியின் எம்.எல்.ஏ.வும் தனது தொழில் எதிரியுமான ராஜசேகரன் என்ற நேருவின் ஆட்களால் படுகொலை செய்யப்பட்டான்.

இந்த குண்டர் படை தலைவர்களின் இறுதி கட்ட மோதலில்தான் ஆந்திரா மாநிலமே ஒருவாரம் நிலைகுலைந்து போனது.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் இழிந்த இறுதி நிலையான பொறுக்கி அரசியலின் இலக்கண சுத்தமான உதாரணம் தான் விஜயவாடா கலவரம். இந்த இரு குண்டர் படைத் தலைவன்களின் பிழைப்புவாத அரசியலின் ஒட்டு மொத்த உருவம் தான் இன்றைய ஓட்டுப் பொறுக்கி கட்சி தலைவர்களின் பின்னணியும் பிரபலமும்.

பொறுக்கி அரசியலின் தமிழகத்தின் பிதாமகனான கருணாநிதி, மதுரைக்கு ஒரு முத்து, திருச்சிக்கு ஒரு அன்பில், தஞ்சைக்கு ஒரு மன்னை, கோவைக்கு ஒரு-ராஜமாணிக்கம், சேலத்துக்கு ஒரு வீரபாண்டி, ஆற்காடுக்கு ஒரு வீராசாமி என மாவட்டத்துக்கு ஒரு பொறுக்கி அரசியல் தலைமையை உருவாக்கி தமிழகத்தின் தானைத் தலைவனானது போலவே, ஜேப்பியார், கருப்பசாமி பாண்டியன், சேடப்பட்டி முத்தையா, சாத்தூர் ராமச்சந்திரன், சென்னை மதுசூதனன் என்று முழுக்க முழுக்க எம்.ஜி.ஆர். தனது ரசிகர்கள் கும்பலிலிருந்து குண்டர்களை பொறுக்கி அரசியலின் தலைவர்களாக தேர்ந்தெடுத்து தமிழகத்தின் புரட்சித் தலைவராக உருவானது போலவேதான், ஆந்திராவிலும், என்.டி. ஆரின் ஆட்சி உயிர் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது. பொறுக்கி அரசியலை, அன்னை இந்திராவிடமிருந்து வாரிசுரிமையாக சுவீகரித்துக் கொண்ட ராஜீவும் அரியணையில் ஒட்டிக் கொண்டிருப்பது இதே வழியில் தான். ஒரிசாவுக்கு ஒரு பட்நாயக், கேரளாவுக்கு ஒரு கருணாகரன், பீகாருக்கு ஒரு ஜெகந்நாத் மிஸ்ரா என காங்கிரசு மாநிலங்களில் இருக்கும் தேர்ந்தெடுத்த பொறுக்கி அரசியல் தலைவர்களின் தயவில்தான் தேசீயத் தலைவராக வலம் வந்துக் கொண்டிருக்கிறார், பாசிச ராஜீவ்.

சுருக்கமாகச் சொன்னால் என்.டி.ஆரின் பிராந்திய வாதமும் காங்கிரசின் தேசியமும் தேய்ந்து போய் இப்போது ஒரு ஆளுமையில் இருப்பது பொறுக்கி அரசியல்தான். அதன் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு தான் விஜயவாடா கலவரம். அதன் தர்க்க ரீதியான முடிவு பாசிச அடக்கு முறைதான். எதிர் கட்சிகளின் தேசிய முன்னணியோ, போலிக் கம்யூனிஸ்டுகளின் இடது சாரி கூட்டணியோ இந்த அபாயத்தை தடுத்து நிறுத்த அருகதையற்றதாகி விட்டன. மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களின் தலைமையிலான புரட்சிகர அமைப்புகளும் அரசியலும் மட்டுமே பொறுக்கி அரசியலுக்கு மாற்றாக இருந்து அதை முறியடிக்க முடியும்.

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

## இந்திய - சீன எல்லை தகராறு: மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்:

# நேருவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் - சதிகள்!

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சென்ற மாதம் மேற் கொண்ட சீனப் பயணத்தை ஒட்டி நீண்ட காலமாகத் தீராதிருக்கும் இந்திய-சீனப் பிரச்சினைகள் முன்னுக்கு வந்துள்ளன. குறிப்பாக இந்திய-சீன எல்லைத் தகராறு. அதோடு நெருங்கிப் பிணைந்துள்ள திபேத்- காஷ்மீர் விவகாரங்கள்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இருதரப்பும் ஒப்புக் கொண்ட தெளிவான, வரையறுக்கப் பட்ட எல்லை ஒருபோதும் இருந்ததே இல்லை. 1954 ஆம் ஆண்டுவரை இது தான் இந்திய அரசின் அதிகாரபூர்வ நிலைப்பாடு. இந்த யதார்த்தத்தின் அடிப்படையில் இந்திய -சீன எல்லைப் பிரச்சினையைப் பற்றிப் பேசித் தீர்த்துக் கொண்டிருக்க முடியும்.

அதற்குப்பதிலாக, பிரச்சினைக்குள்ளான பகுதிகளை அடாவடியாகவோ, தந்திரமாகவோ கைப்பற்றிக் கொள்வதற்கான முயற்சிகளில் இந்திய அரசு ஈடுபட்டது; பிறகு இதுவே இரு நாடுகளுக்கும் இடையிலான பகையாக மாறியது.

நேரடி இராணுவத் தலையீடு மூலம் திபேத்தின் மீது ஆக்கிரமிப்பு - ஆதிக்கத்தை நிலைநாட்டுவது; இந்திய - சீன எல்லையில் பிரச்சினைக்குள்ளான பகுதிகளை அடாவடித் தனமாக, ஒரு தலைப்பட்சமாகக் கைப்பற்றிக்கொள்வது — என்கிற கொள்கைக்காக வல்லபாய் பட்டேல் தலைமையிலான ஓர் ஆளும் கும்பல் வலிந்து நின்றது. புதிதாகத் தோன்றியுள்ள கம்யூனிச சீனத்தைப் போரில் வெல்வது எளிதான காரியம் என்று அது நம்பியது.

ஜவகர்லால் நேரு தலைமையிலான மற்றொரு ஆளும் கும்பலும் இப்படித்தான் ஆரம்பத்தில் சீனத்தைப் பற்றி எடை போட்டு ஆக்கிரமிப்பு இராணுவ சாகசக் கனவு கண்டது. எனவே தான் கொரிய யுத்தத்தில் அமெரிக்க ஆக்கிரமிப்பை பகிரங்கமாகவே ஐக்கிய நாடுகள் சபையில் ஆதரித்தது. அமெரிக்காவுக்கு எதிராக சீன செஞ்சேனை போரில் குதித்ததை எதிர்த்தது. ஆனால் கொரியப்போரில் ஆக்கிரமிப்பு அமெரிக்கப்படையை விரட்டியடித்து, செஞ்சேனை காட்டிய வல்லமையைக் கண்டபோது திடீர் "பல்டி" அடித்தது. கொரியாவில் அமெரிக்கத் தலையீட்டை எதிர்த்தது. அதே போல இந்தியாவின் சீனக் கொள்கையையும் மாற்றிக்கொண்டது. காரணம் செஞ்சேனைக் கெதிரான பகிரங்கமான நேரடி இராணுவ மோதலில் வெல்ல முடியாது என்பதை நேரு தலைமையிலான கும்பல் கண்டது. எனவே சூழ்ச்சி, தந்திரம், நேசஉறவாடி அடுத்துக்கெடுப்பது மற்றும் சதி செய்து இரகசிய ஆக்கிரமிப்பில் ஈடுபடுவது ஆகிய முறைகளைக் கொண்டு தமது ஆதிக்க-விரிவாக்க நோக்கங்களை சாதித்துக்கொள்ள முனைந்தது.

1950 அக்டோபரில் அமெரிக்காவின் தலைமையிலான ஐக்கிய நாடுகள் சபையின் ஆக்கிரமிப்பு இராணுவம் 38 வது இணைக்கோட்டைத் தாண்டி வட கொரியாவைத் தாக்கியது. ஜெனரல் மெக் ஆர்தர் தாக்குதல் என்றழைக்கப்பட்ட அந்த ஆக்கிரமிப்பு வெறிச் செயல் சீனச் செஞ்சேனையின் பெரும் அளவு எதிர்த்தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அணுகுண்டு வீசப் போவதாக அமெரிக்க அதிபர் டிருமேன் மிரட்டிய போது ஓர் உலகப் போருக்கான அபாயம் மூண்டது. இது அமெரிக்காவுக்கு எதிராக ஆசியாவெங்கும் கோபாவேசத்தை மூட்டியது.

அமெரிக்க சவாலை எதிர்த்து முறியடிக்கும் புதிய சக்தியாக சீனா உருவானதைத் தொடர்ந்து உலகசக்திகளின் பலாபலத்தில் மாற்றம் ஏற்பட்டதை நேரு கண்டார். எனவே வல்லரசுகளுக்கிடையே "சமாதானத் தரகு" வேலையில் இறங்கினார். "ஆசியாவில் கம்யூனிசத்தை விட எங்களுக்குப் பேராபத்தை விளைவிப்பது யுத்தமாகும்" என்றார் ஐ.நா வில் இந்தியப் பிரதிநிதியாக இருந்த நேருவின் தங்கை விஜயலட்சுமி பண்டிட்.

"சீனா புது பலத்தைப் பெற்றுள்ளது. அதனால் நான் ஆழமாக வருந்தும் வகையிலே சில சமயங்களில் அது நடந்துகொள்கிறது. ஆனால் சீனாவின் பின்னணியை நாம் நினைவு படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது மற்ற பிற ஆசிய நாடுகளைப் போலவே நீண்டகால போராட்டமும் விரக்தியும் நிறைந்தது. ஏகாதிபத்திய வல்லரசுகளால் சமமான தகுதியில் வைத்து நடத்தவில்லை; அவற்றால் மதிப்பில்லாமல் மோசமாக நடத்தப்பட்டது. கோடிகோடியான மக்களின் உணர்வுகளை மறுப்பது சரியானதும் அல்ல; சாத்தியமானதும் அல்ல. அவ்வாறு செய்வது இனிமேலும் பாதுகாப்பானது அல்ல" என்று 1951 ஜனவரி 13இல் லண்டன் வானொலிக்குப் பேட்டியளித்தார் நேரு.

அந்தச் சமயத்தில் சீன- அமெரிக்கப் படைகளுக்கிடையிலான போர் கடுமையாக நடந்து கொண்டிருந்தது. அந்தந்த நிலைகளில் நின்று போர் நிறுத்தம் -சமாதானம் செய்து கொள்வது என்கிற அரபு-ஆசிய நாடுகளின் தீர்மானத்தை ஐக்கியநாடுகள் சபையில் இந்தியா தலைமை தாங்கிக் கொண்டு வந்தது. இப்படி உத்தமனைப் போல சீன-ஆசிய மக்களுக்காக முதலைக்கண்ணீர் வடித்துக் கொண்டே சமாதானத்தைப் பற்றி "சண்டமாருதம்" அடித்துக் கொண்டே வேறொரு சதி-ஆக்கிரமிப்பு வேலையில் இறங்கியது, இந்திய அரசு.

1910 இல் திபேத்தியத் தலைநகர் லாசாவுக்கு சீனத் தளபதி சாவே எர்பங் வடகிழக்குப் பிராந்தியத்தின் வழியாக படை நடத்திப் போயிருக்கிறான். அப்போதிருந்து இந்தியாவுக்கு எதிரான சீனத்தாக்குதல் வடகிழக்கில் இருந்து வருவதற்குத்தான் வாய்ப்பிருக்கிறது என்று இந்திய இராணுவம் கருதிவந்தது. எனவே அசாமின் மலை அடிவாரத்தில் உள்ள எல்லையை இமயமலை முகட்டுக்குத் தள்ளுவதை இந்தியக் காலனிய அரசு நோக்கமாகக் கொண்டிருந்தது. இதற்காக காலனிய அரசே வரைந்து கொண்டதுதான் மக்மகோன் எல்லைக் கோடு. ஆனால் அப்போதைய அரசு அதை அமுலாக்கவில்லை. ஏனென்றால் கம்யூனிச ரஷ்யா மற்றும் சீன அரசுக்கும் பிரிட்டிஷ் இந்தியக் காலனிக்கும் இடையேயுள்ள ஓர் இடைத்தடுக்கு, அடிதாங்கி நாடாக -பொம்மை அரசாக திபேத் இருக்கவேண்டும் என்று ஆங்கிலேய ஏகாதிபத்தியம் விரும்பியது. அதனால் திபேத்தில் பல சலுகைகளையும் அனுபவித்து வந்தது. அப்படிப்பட்ட திபேத்திய அரசே இமயமலை முகடுவரை இந்திய எல்லையை நகர்த்துவதை எதிர்த்து வந்தது. அது மக்மகோன் எல்லைக் கோட்டிற்குத் தெற்கேயும் தனது நிர்வாக உரிமையைச் செலுத்தியும் வந்தது.

காலனிய முன்னோடிகளின் அடியொற்றி நடந்த நேரு அரசு திபேத்திய -சீனப் பேச்சு வார்த்தைகளைத் தடுத்து, திபேத்தைத் தனி நாடாக அமைத்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் அமெரிக்க சி.ஐ.ஏ.க்களுடன் சேர்ந்து சதி வேலையில் ஈடுபட்டிருந்தது. இந்த சதி வெற்றிபெற்றால் திபேத்தில் தனிச் சலுகைகள் - உரிமைகள் பெறுவதும் பிரச்சினைக்குள்ளான எல்லைப் புறப்பகுதிகளைத் தம்வசப்படுத்திக் கொள்வதும் எளிதாகிவிடும் என்று கனவு கண்டு செயல்பட்டது, நேரு அரசு.

ஆனால் எந்த ஏகாதிபத்திய வல்லரசிடம் இருந்தும் நேரடி - பகிரங்க இராணுவ, அரசுதந்திர ஆதரவு கிடைக்காமற்போகவே இந்தியாவில் பல மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த திபேத்திய தூதுக்குழு பீகிங் புறப்பட்டுப் போனது. பீகிங்கில் சீன-திபேத்தியக் குழுக்களுக்கிடையே 1951 ஏப்ரலில் துவங்கிய பேச்சு வார்த்தைகள் முடிந்து 1951 மே 23ந் தேதியே ஒரு 14



படிப்பகம்

www.padippakam.com

அம்ச ஒப்பந்தம் ஏற்பட்டது. திபேத்திய இராணுவம் சிறுகச் சிறுக சீன மக்கள் படையில் இணைவது, வெளிவிவகாரங்கள் அனைத்தையும் சீனாவின் மக்கள் அரசே மேற்கொள்வது என்கிற அடிப்படையில் திபேத்துக்கு தன்னாட்சி உரிமை வழங்குவதை அந்த ஒப்பந்தம் உறுதி செய்தது.

திபேத்தில் சதிகள் செய்து ஆதாயம் தேடிக் கொள்ளும் தனது முயற்சி தோற்றுப் போகும் என்பதைக் கண்ட நேரு அரசு திபேத்தியத் தூதுக் குழு இந்தியாவை விட்டு பீகிங் புறப்பட்டதும் ஆக்கிரமிப்பு வேலையைத் துவங்கி விட்டது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே பிரச்சினைக் குள்ளான மக்மகோன் எல்லைக் கோட்டிற்குத் தெற்கே திபேத்திய நிர்வாகத்தின் கீழ் இருந்த "தாவாங்" பகுதியை 1951 பிப்ரவரி 2ந் தேதி கைப்பற்றியது. அப்போது சீன அமெரிக்கப் படைகளுக்கிடையே கடுமையான போர் நடந்து கொண்டிருந்ததை தகுந்த தருணமாகப் பயன்படுத்திக் கொண்டது நேரு அரசு. அதனாலேயே சீன அரசிடமிருந்து இதற்கு எதிர்ப்பு வரவில்லை. ஆனால் "தாவாங்" கை இந்திய அரசு கைப்பற்றிக் கொண்ட செய்தி அறிந்ததும் திபேத்தியத் தலைநகர் லாசாவில் இருந்த இந்திய தூதரகத்தின் முன்பாக திபேத்தியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

"தாவாங்" கைக் கைப்பற்றிய பத்தாம் நாள் அதாவது 1951 பிப்ரவரி 12ந் தேதி நாடாளுமன்றத்தில் பின்வருமாறு நேரு பேசினார். "திபேத்தில் நடந்துவிட்ட சில சம்பவங்களால் இழப்பு - பாதிப்புக்கு உள்ளானோம் என்பதை சபை நினைவுபடுத்திக் கொள்ள முடியும். ஆனாலும் சீன மக்கள் அரசாங்கத்துடன் நட்புறவுகளைப் பேணும் நமது விருப்பம் அல்லது நமது உறவை அது பாதிக்கும்படி நாம் அனுமதிக்கவில்லை. நவ சீனத்துடன் இப்போதைய உறவுகள் நட்பு முறையிலானது என்று சொல்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்".

திபேத்தை மீட்க சீனா "மேற்கொண்ட" இராணுவ நடவடிக்கையைத் தான் "திபேத்தில் நடந்து விட்ட சம்பவங்கள்" என்று நேரு குறிப்பிடுகிறார். ஆனால் அது உண்மை அல்ல. ஏனெனில் சாம்டோவைக் கைப்பற்றிய சீன இராணுவம் அப்போது முன்னேறி திபேத்துக்குள் நுழையவில்லை. எனவே திபேத்திய தூதுக்குழுவை இந்தியாவிலேயே நிறுத்தி வைத்து, சீன-திபேத்திய பேச்சு வார்த்தைகளைத் தடுத்துவிட நேரு அரசு செய்த சதி தோற்றுப் போனதை மனதில் வைத்துத் தான் நேரு அவ்வாறு பேசினார். அதனால் தான் தாவாங்கைக் கைப்பற்றும் நடவடிக்கையிலும் இறங்கினார். சீன மத்திய அரசிடமிருந்து எதிர்ப்பு வராததைக் கண்ட இந்திய அரசு வடகிழக்குப் பிராந்தியம் முழுவதிலும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கைகளில் இறங்கியது.

"தாவாங்" கைக் கைப்பற்றிய உடனேயே, 1951 பிப்ரவரியிலேயே இராணுவத் துணை அமைச்சர் தலைமையில் எல்லைப் பாதுகாப்புக் கமிட்டி ஒன்றை இந்திய அரசு அமைத்தது. இராணுவம் தகவல் தொடர்பு, உள்துறை மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சகப் பிரதிநிதிகள் அதில் பங்கேற்றனர். திபேத்தின் மீது சீனப்படையெடுப்பால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கென்று கூறப்பட்டது.

1953 ஆரம்பத்தில் அக்கமிட்டி ஓர் அறிக்கை சமர்ப்பித்தது. "அசாம் துப்பாக்கிப் படையை மறு ஒழுங்கமைப்பு செய்து அதிகரிப்பது. வடகிழக்கு எல்லை பிராந்தியத்தில் நிர்வாகத்தை விரிவுபடுத்துவது. எல்லை நெடுகிலும் உளவறியும் வலையின் வலை அமைப்பது. ஆயுதந்தாங்கிய சிவிலியன் போலீசை வளர்ப்பது. தகவல் தொடர்பு மற்றும் சோதனைச் சாவடிகளை அபிவிருத்தி செய்வது" (சீன - இந்திய உறவுகள் பற்றிப் பிரதமர் உரை: நாடாளுமன்றத் தொகுப்பு I பக்:251) ஆகியவை அக்கமிட்டியின் பரிந்துரைகள். வடக்கிலும் வட கிழக்கிலும் பாதுகாக்கவேண்டிய எல்லையையும் அது வரையறுத்தது. ஆனால் அந்த வரையறை இரகசியமாக வைக்கப்பட்டது.

வடகிழக்கே "தாவாங்"கைக் கைப்பற்றியது குறித்து சீன மக்கள் குடியரசிடமிருந்து எதிர்ப்பு வராமற்போகவே, மக்மகோன் எல்லைக் கோட்டை அது மறைமுகமாக அங்கீகரித்து விட்டது என்று இந்திய அரசு தானாகவே முடிவுகட்டிக் கொண்டது. அப்போது சீன அரசு தனது எதிர்ப்பைக் காட்டாமல் இருந்ததற்கு வேறுபல காரணங்கள் இருந்தன.

(1) புதிதாகத் தோன்றியிருந்த கம்யூனிச மக்கள் சீனக் குடியரசு இன்னமும் உள்நாட்டில் தனது எதிரிகளை முறியடித்து அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. (2) கொரியப் போரில் ஈடுபட்டு, உலகிலேயே மிகப்பெரிய எதிரியை - படையை எதிர் கொண்டு போரிட்டு வந்தது.(3)ஐக்கிய நாடுகள் சபைஉட்பட உலக அரங்கில் இன்னமும் பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருந்த அமெரிக்கா மற்றும் பிற மேற்கு ஏகாதிபத்தியங்கள் சியாங்கேஷேக் ஆட்சியிலுள்ள தாய்வானைத்தான் சீன அரசாக அங்கீகரித்தன. மக்கள் சீனத்தைத் தனிமைப்படுத்தித் தாக்கி வந்தன. (4) இந்தியாவைப் பொருத்தவரை பர்மா, சீனா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளுடனே எல்லைப் பிரச்சினைகள் இருந்தன (சிக்கிம், பூடான், நேபாளத்துடன் சமனற்ற உடன்பாடு - ஆதிக்கம் கொண்டிருந்தது). ஆனால் சீனாவுக்கோ - ரஷ்யா, மங்கோலியா, கொரியா, வியத்நாம், பர்மா, தாய்லாந்து, இந்தியா, பாகிஸ்தான், ஆஃப்கான் ஆகிய பல நாடுகளுடன் எல்லைகளை வரையறுக்க வேண்டி இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் அண்டை நாடுகளுடன் எல்லைப் பிரச்சனைகளைக் கிளப்பி அவற்றுடனான உறவுகளைச் சிக்கலாக்கிக் கொள்ள சீன அரசு விரும்பவில்லை. இதைப் பகிரங்கமாகவே கூறிய சீன அரசு தீர்க்கப் படவேண்டிய எல்லைப் பிரச்சினைகள் உள்ளன; அவற்றை பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்று வலியுறுத்தி வந்தது.



டெங் ராஜீவ் பேச்சுவார்த்தை

1951-52 ஆகிய அந்த ஆண்டுகளில் நடந்த இந்திய - சீனப் பேச்சு வார்த்தைகளைப் பற்றிப் பின்வருமாறு 1959 நவ. 25 நாடாளுமன்ற உரையில் நேரு கூறினார். "இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலே பிராந்திய தகராறோ, பிரச்சினைக்குரிய நிலைப் பாடுகளோ இல்லாத திபேத்திலான இந்தியாவின் ஒவ்வொரு நலனையும் பாதுகாப்பதில் சீனப் பிரதமர் சௌ-என்-லாய்க்கு அக்கறை - ஆர்வம் உண்டு. இப்படி 1957 செப். 27ந் தேதி அவர் இந்தியத் தூதரிடம் நடத்திய அதிகாரபூர்வமற்ற பேச்சுவார்த்தையின் போது தெரிவித்தார். திபேத்திய எல்லையை உறுதிப்படுத்திக் கொள்ளும் விவகாரம் இந்தியா, நேபாளம், சீனா ஆகிய மூன்று நாடுகளின் பொது நலனுக்குரியது. அவைகளுக் கிடையிலான பேச்சு வார்த்தையின் மூலம் மிகச்சிறந்த



படிப்பகம்

www.padippakam.com

முறையில் அதைச் சாதித்து விட முடியும். 1951 சீன -திபேத்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து எல்லைச் சாவடிகளை மேற்கொள்வதற்காக லாசாவுக்குள் சீன ராணுவம் புகுந்தது. எனவே அந்த விவகாரத்தை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தீர்ப்பது அவசியமானது''.

1951 அக். 4ந் தேதி சீனப் பிரதமருக்கு இந்தியத் தூதர் ஒரு செய்தி அனுப்பினார். அதில் சீனப் பிரதமர் குறிப்பிடும் பிரச்சினைகள் மீது பேச்சு வார்த்தை நடத்துவதை இந்திய அரசு வரவேற்பதாக எழுதினார். ஆனால் இந்திய அரசு விரும்பியது. திபேத்தில் தனது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான பேச்சு வார்த்தையைத் தான். மற்றபடி சீன (திபேத்) - இந்திய எல்லைப் பிரச்சினையின் மீதான விவாதத்தைக் கிளப்புவதை அது ஒருபோதும் விரும்பவில்லை. எல்லைப் பிரச்சினையின் மீது பேச்சு வார்த்தையே கிடையாது என்று அடாவடித்தனமாக மறுத்து விடுவது தான் நேரு அரசின் நிலைப்பாடாக இருந்தது.

''இந்தியாவின் சீனயுத்தம்'' என்கிற நூலை எழுதிய ''டைம்ஸ்'' பத்திரிக்கையின் இந்திய நிருபர் நிவில் மாக்ஸ்வெல் பின் வரும் ஆதாரத்தோடு இதை நிருபிக்கிறார்.

இந்தியாவின் வெளி விவகாரத் துறைக்கு முதல் தலைமைப் பொதுச் செயலாளராக இருந்து ஓய்வு பெற்று பம்பாய் மாநிலக் கவர்னரான ஜி.எஸ். பஜ்பாய் 1952 மேயில் தனது பழைய அமைச்சரவைக்கு ஒரு கடிதம் எழுதினார். அதிலே மக்மகோன் எல்லைக் கோடு விவகாரத்தை சீன அரசாங்கத்திடம் கிளப்புவதில் இந்தியா முன்முயற்சி எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். ''சீனாவுக்கு எதிரான பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் எஞ்சிய தழும்பாக மக்மகோன் கோட்டை சீனா கருதக்கூடும். இந்தத் தழும்புக்கு நிவாரண சிகிச்சை அளிக்கவோ, இந்தத் தழும்பை அழித்து விடவோ அடிப்படையாக எல்லையைச் சரிப் படுத்துவதற்கு சீனா முயலக்கூடும். அவ்வாறு செய்வது நமது விருப்பத்துக்கோ நலனுக்கோ உகந்த தாகாது'' என்று பஜ்பாய் எச்சரித்தார்.

இது குறித்து சீனாவுக்கான தூதர் கே.எம்.பணிக்கரிடம் நேரு விவாதித்தார். பிறகு பஜ்பாய்க்குப் பின்வருமாறு பதிலளித்தார். மக்மகோன் எல்லைக் கோடு விவகாரத்தைக் கிளப்புவது இந்திய நலன்களுக்கு உகந்தது ஆகாது என்று பிரதமர் தீர்மானித்துள்ளார். மக்மகோன் கோட்டை எல்லையாகக் கருதுவதாக சந்தேகத்துக் கிடமின்றி பகிரங்கமாக அறிவித்து விட்டதால், சீனா தான் கிளப்ப வேண்டும் என்பது நேருவின் எண்ணமாகும். இந்தியா விவகாரத்தைக் கிளப்பினால், திபேத்துடன் நாம் போட்டுள்ள ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வது அல்லது அதை நிராகரித்து விட்டு பேச்சு வார்த்தைக்கு முன் வர வேண்டும் என்கிற ஏதாவது ஒரு முடிவுக்கு சீனாவைத் தள்ளுவதாகும். முதலாவது எண்ணிப் பார்ப்பதற்கும் எளிதானதல்ல; ஏனெனில் இந்தோ - திபேத்திய ஒப்பந்தம் எதுவும் தன்னைக் கட்டுப் படுத்தாது என்று முந்தைய ஒவ்வொரு சீன அரசும் மறுத்து வந்திருக்கிறது. இரண்டாவது நமக்கு சாதகமானதல்ல.


இதற்கு மாறாக, சீனா பிரச்சினையைக் கிளப்பினால் விவகாரத்தை மீண்டும் விவாதத்துக்கு உட்படுத்துவதை அடியோடு மறுத்து விடுவோம். 'மக்மகோன் கோட்டிற்கு இந்தப் புறம் உள்ள பிராந்தியம் முழுவதும் நம்முடையது; அதிலே விவாதிப்பதற்கு எதுவுமே கிடையாது' என்று நமது பிரதமர் பகிரங்கமாக கொடுத்த அறிவிப்பிலேயே ஊன்றி நிற்போம்'' (நிவில் மாக்ஸ்வெல் பக். 76-77).

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே இருதரப்பும் ஒப்புக்கொண்ட தெளிவான, வரையறுக்கப்பட்ட எல்லை ஒரு போதும் இருந்ததே கிடையாது. இது இந்திய அரசின் அதிகாரபூர்வ நிலைப்பாடாக இருக்கும் போதே மக்மகோன் எல்லைக் கோட்டுக்குத் தெற்கே உள்ள பகுதிகள் இந்தியாவினுடையவை; அவற்றின் மீது விவாதம் நடத்துவதற்கு இடமே கிடையாது என்று அடா வடித்தனமான முடிவெடுத்து செயல்பட்டது நேரு அரசு. இப்படி குருட்டடியாகப் பேசுவதற்கான ஆதார - அடிப்படை பிரிட்டிஷ் காலனிய அரசு 1914 ஜூலை 3ந் தேதி திபேத்துடன் போட்டுக் கொண்டதாகக் கூறப்படும் சிம்லா ஒப்பந்தமாகும். ஆனால் அந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்க சீன மத்திய அரசு மறுத்து விட்டது. எனவே அது செல்லுபடியாகாது என்பது சீன அரசு வாதம். சீன அரசின் இந்த வாதத்தையும் ஏற்கும் வகையிலே நேரு அரசு நடந்து கொண்டது அதன் இன்னொரு சுயமுரண்பாடு.

அதாவது எந்த ஆதார -அடிப்படையைக் கொண்டு மக்மகோன் எல்லைக் கோட்டை சட்டபூர்வமானது -நியாய பூர்வமானது என்று நேரு அரசு உரிமை பாரட்டுகிறதோ அதையே நிராகரிக்கும் வகையில் திபேத்தின் அரசியல் அந்தஸ்து - தகுதி குறித்து நிலையெடுத்தது. அதாவது திபேத் தனி நாடு அல்ல. சுயாட்சி உரிமையுடைய, சீனத்துக்குள் அடங்கிய ஒரு பகுதி; அதன் வெளியுறவு, தற்காப்புத் துறைகளில் முடிவெடுக்கும் உரிமை சீன அரசுக்குத் தான் உண்டு என்பதை பகிரங்கமாக ஒப்புக் கொண்டது நேரு அரசு. இதனடிப்படையில் பார்க்கும் போது 1914 ஜூலை 3 இந்திய -திபேத்திய சிம்லா ஒப்பந்தமும் அதன் விளைவான மக்மகோன் எல்லைக் கோடும் செல்லுபடியாகாது என்றாகிறது. திபேத்தின் மீது ஆதிக்கம் வகிக்க இரகசிய - சதிகள் மூலம் எவ்வளவு தான் முயன்ற போதும், திபேத் பற்றிய அதிகாரபூர்வ நிலைப்பாடும் செயல்பாடும் இதையே உறுதி செய்கிறது.

1951 அக்டோபரில் இந்தியா வந்திருந்த பணிக்கர், வெளி விவகார அமைச்சகத்துடன் நடத்திய ஆலோசனையில் பின் வரும் கருத்தைத் தெரிவித்தார் என்று உளவுத்துறை இயக்குநர் பி.என். முல்லிக் எழுதியுள்ளார். ''திபேத்துக்குள் கணிசமான அளவு இராணுவத்தை சீனா அனுப்பாது என்று நம்புகிறேன். நவீன காலத்தில் இரு சுதந்திரமான நாடுகளுக்கிடையிலான உறவில் நாட்டுக்கு வெளியிலுள்ள பிராந்தியங்களில் உரிமை கொண்டாடுவதற்கு இடம் கிடையாது. திபேத்திடமிருந்த பிரிட்டிஷார் பலாத்காரமாகப் பிடுங்கிய உரிமைகள் நீடிக்க வேண்டுமென்று வலியுறுத்துவது இந்தியாவை முற்றிலும் தவறானதொரு நிலையில் நிறுத்திவிடும்.

''எப்படிப்போனாலும் அவை நீடிப்பதற்கு சீனா சம்மதிக்காது. இராணுவ பலத்தினால் தவிர வேறு எந்த வழியிலும் இந்தியா அந்த உரிமைகளை நிலைநாட்ட முடியாது. ஆனால் அப்படிச் செய்யும் நிலையில் இந்தியா இல்லை. ஆகவே நிலைத்திருக்க முடியாதவற்றையெல்லாம் மரியாதையாகக் கைவிடுவதும் ஒப்பந்தங்களின் மூலமானவை இல்லையானாலும், மேலும் அடிப்படையில் இயல்பான பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகளை வலியுறுத்துவது ஆகி




பிரச்சினைக்குள்ளான எல்லைப் பகுதிகளை விளக்கும் வரைபடம்

படிப்பகம்

www.padippakam.com

யவை தான் சிறந்த கொள்கை. பணிக்கரின் கருத்தை இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டது'' (பி.என். முல்லிக் நேருவோடு எனது ஆண்டுகள் பக்.147).

1952 பிப்ரவரியில் பிரதமர் சௌ-என்-லாயைச் சந்தித்த பணிக்கர், திபேத்தில் இந்தியா கொண்டுள்ள உரிமைகள் குறித்து ஒரு அறிக்கை கொடுத்தார் அதில் ஒருவருக்கொருவர் நிறைமனதுடையும் தீர்வுக்கு வரவேண்டும் என்பதை வலியுறுத்தினர். 'திபேத்தில் இந்தியாவின் பொருளாதார, கலாச்சார நலன்களைப் பாதுகாப்பதில் சிரமம் எதுவும் இல்லை' என்றார் சீனப் பிரதமர். (நேருவின் நாடாளுமன்ற உரை 1959 நவ.25).

1952 மே மாதம் இந்தியா திரும்பும் போது திபேத் பற்றி சீனப் பிரதமருடன் மீண்டும் பணிக்கர் விவாதித்தார். அப்போது ''திபேத்தில் இந்தியாவின் கலாச்சார, பொருளாதார நலன்களுடைய உரிமையை சீனப்பிரதமர் ஒப்புக் கொண்டார். ஆனால் அப்போது சட்டவிரோதமான முறையில் லாசாவில் நீடித்து வந்தது இந்திய அரசியல் முகாமை அலுவலகம்; அதை இந்தியாவின் துணைத் தூதரகமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அதற்குப் பதிலாக பம்பாயில் சீன அலுவலகம் வைக்கலாம் என்றும் அவர் கூறினார். தந்திக் கம்பிப் பாதைகள், யாதுங்கில் உள்ள இராணுவ பாதுகாப்புக் குழுக்கள் போன்ற நமது மற்ற பிற சாவடிகள், நிறுவனங்களைப் பொருத்த வரை ஓசையின்றி சிறுகச் சிறுக அவற்றை நாம் அகற்றிக் கொள்ளவேண்டும். தொழில் மற்றும் பிற முகாமைகள் சாதாரண முறையிலான துணைத்தூதரக உறவுகளுக்குக் கீழே வந்து விடும். தகுந்த தருணம் வரும் போது அவை அமுலாக்கப்படும் ''(பணிக்கர்: இரு சீனாக்களில், பக்.175) என்று முடிவானது.

அதன் பிறகு, கியான்சி - யாதுங் ஆகிய நகரங்களுக்கு புதிய இராணுவப் பிரிவுகளை அனுப்பியது; கார்டோக் நகரில் இந்திய தொழில் முகவரிடமிருந்து கம்பியில்லா தந்திக் கருவியைப் பறிமுதல் செய்தது; சிக்கிமிலுள்ள இந்திய அரசியல் அதிகாரி சீன கடவுச் சீட்டு (விசா) இல்லாமல் லாசாவுக்குப் போக அனுமதி மறுத்தது - போன்ற விவகாரங்கள் இந்திய - சீன அரசுகளுக்கிடையே சில்லரை தகராறுகளை 1952 ஜூலை - ஆகஸ்டில் ஏற்படுத்தியவை. இவையும் பணிக்கர் -சௌ-என்-லாய் பேச்சு முடிவை அமுல் படுத்த இந்தியா தவறியதால் எழுந்தவை. எனவே செப்டம்பரில் அந்த முடிவுகளை அமுலாக்கி திபேத் குறித்த விவகாரங்களை சீன மத்திய அரசுடன் மேற்கொள்வது என்று முடிவு செய்து செயல் பட்டது, இந்திய அரசு.

அடுத்த ஆண்டு, அதாவது நவம்பர் 1953 இல் இந்திய வெளி விவகார அமைச்சகத்தில் விவாதம் நடந்தது. அப்போது வரவிருந்த இந்திய - சீன மாநாட்டில் இந்திய - திபேத்திய எல்லைப் பிரச்சினையைக் கிளப்புவதில்லை என்று அதில் முடிவானது. ''நமது பிரதிநிதிகள் விவாதத்தின் போது வட எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியதைப் பற்றிக் ஒரு சிலர் குறிப்பிட்டனர். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் மொத்த விவகாரத்தையும் சீனாவை அனுமதித்து விடக் கூடாது என்பது பொதுவான கருத்து. எப்படியும் மக்மகோன் கோட்டை நமது வட எல்லையாக சீனா அங்கீகரிக்கப் போவதில்லை. எனவே அதன் மீது அந்தப் பேச்சு வார்த்தையும் இருக்க முடியாது'' (பி.என். முல்லிக் நேருவோடு எனது ஆண்டுகள் பக்.155-56)

அந்த மாநாட்டில் ''இந்திய - சீன உறவுகள் நாளும் நெருக்கமாவதால், தீர்க்கத் தகுந்தப் பிரச்சினைகளைப் பேசி தீர்க்கலாம் '' என்றார் சௌ-என்-லாய். ''எல்லாம் சிறிய பிரச்சினைகள். பெரியவை ஒன்றும் இல்லை'' என்றது இந்தியத் தூதுக்குழு ''பொதுவான எல்லைகளை உடைய இந்தியா - சீனா போன்ற இரு பெரிய நாடுகளிடையே பிரச்சனைகள் இருக்கவே செய்யும், ஆனாலும் சுமுகமாகத் தீர்க்க முடியும்'' என்றார் சௌ. (சீன அரசுக்கு இந்திய அரசு கொடுத்த குறிப்பு. நாடாளுமன்ற வெள்ளை அறிக்கை தொகுப்பு III பக். 90).

1954 ஏப்ரலில் கையெழுத்தானது, ''இந்தியாவுக்கும், சீனாவின் திபேத்தியப் பிராந்தியத்துக்கும் இடையிலான தொழில் மற்றும் பிற உறவுகள் மீதான ஒப்பந்தம் கையெழுத்தானது.'' இந்த ஒப்பந்தத்திலும், ''சீனாவின் திபேத்திய பிராந்தியத்''தில் தனது கலாச்சார, வியாபார சலுகைகளுக்காகவே இந்தியா வாதாடிப் பெற்றது. அதாவது திபேத்திலுள்ள இந்து வழிபாடு இடங்களுக்கு பயணிகளும் பாரம்பரிய திபேத்திய சந்தைகளுக்கு வியாபாரிகள் போய் வருவதற்கான உரிமைகளை இந்தியா பெற்றது. இதையும் கூட பிரச்சினைக்குள்ளான வடக்கு, வடகிழக்கு எல்லை சம்பந்தமாக -அந்தவழியாகப் போய் வருவது பற்றி இல்லை, மையப்பகுதியைப் பயன்படுத்தவே உரிமை வழங்கப்பட்டது.

இவ்வாறு, திபேத் விவகாரத்தில் , சீன மத்திய அரசின் முழு உரிமையை அங்கீகரித்து சலுகைகளைப் பெறும் ஒப்பந்தம் செய்து கொண்டதால் 1914 இந்தியா - திபேத் சிம்லா ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா கொண்டாடும் எல்லை உரிமைகளை அதிகாரபூர்வமாக இழப்பதாகிறது. இருந்த போதும் ''முன்னேறும் கொள்கை'' என்ற கேலிக்குரிய ஆக்கிரமிப்புக் கொள்கையின் மூலம் நேரு மேலும் பல குற்றங்களைத் தொடர்ந்தார். வடக்கிலும், வடகிழக்கிலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை இரகசியமாக மேற்கொண்டார்.

(தொடரும்...)

## சீரழிந்த சீனத்தில் பெருகிவரும் பெண்ணடிமைத்தனம்

*பழமையும் பிற்போக்கும் ஆளுமையில் இருக்கும் நாடுகளில் தான் பெண்ணடிமைத்தனம் நீடிக்கும். நிலப் பிரபுத்துவப் பழமைப் பிற்போக்கையும் ஏகாதிபத்திய சுரண்டலையும் ஒழித்துக் கட்டிய மாவோவின் செஞ்சீனத்திலே பெண்ணடிமைத்தனம் அருங் காட்சியகத்தில் வைக்கப் பட்டிருந்தது. ஆனால் இன்று டெங் தலைமையில் போலிக் கம்யூனிஸ்டுகள் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றி முதலாளித்துவத்தை மீட்டெடுத்ததும் அதன் அருவெறுக்கத்தக்க விளைவுகள் உடனடியாகவே தெரிய ஆரம்பித்து விட்டது.*

*இன்று சீனத்திலே பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் இரு மடங்கு அதிகரித்துள்ளது. பெண் சிசுக்களைக் கருவிலேயே கொல்லும் கொடூரங்களும் வேகமாகப் பரவி வருகிறது. வரதட்சிணை வாங்குவதும் ஏன், மணப் பெண்ணையே ஏலம் விடுவதும் கூட பெருகி வருகிறது.*

*சர்வ தேசப் பொருளாதாரக் கழகத்தின் தலைவரும், ஹார்வர்ட் பல்கலைக் கழகப் பேராசிரியருமான டாக்டர் அமர்தியா சென் சமீபத்தில் கல்கத்தாவில் பேசும் போது, ''சீனாவில் நிலத்தில் மீண்டும் தனியுடைமையைக் கொண்டு வந்ததால் கிராமப்புறங்களில் மருத்துவ, சுகாதர வசதிகள் இல்லாமல் போய் விட்டது. இதனால் பெண்களும் குறிப்பாக பெண் குழந்தைகளும் பாதிக்கப் படுகின்றனர். மேலும், பெண் என்றாலே வெறுத்தொதுக்கும் மனோபாவம் மீண்டும் தலை விரித்தாடுகிறது. கம்யூன் எனப்படும் கூட்டு உற்பத்தி முறை ஒழிக்கப் பட்டு விட்டதால் பெண்கள் வேலை வாய்ப்பை இழந்து படிப்படியாக ஆண்களுக்கு அடிமைகளாக்கப் பட்டுவிட்டனர்'' என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு முதலாளித்துவப் பொருளாதார அறிஞரே சாடுமளவுக்கு சீனப் பெண்களின் நிலை மிக மோசமாக உள்ளது.*

*1979ல் ''ஒரு குடும்பம் - ஒரு குழந்தை'' என்ற குடும்ப நலத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட பிறகு பெண் சிசுக்களைக் கொல்வதும், பெண் குழந்தையைப் பெற்றெடுத்த மனைவியைக் கணவனும் மாமியாரும் துன்புறுத்துவதும், அடித்து விரட்டுவதுமான காட்டு மிராண்டித்தனங்கள் அதிகரித்து விட்டன. புரட்சிக்கு முன்பிருந்ததை விட இன்று சீனப் பெண்களின் சராசரி வயது கூட குறைந்து போய் விட்டது.*

*இவை தான் டெங் கும்பல் சீனத்தில் கொண்டு வந்த சீர்திருத்தங்களின் வட்சணம்! சீன மக்களுக்கு இவை தேசிய அவமானமாக இருக்கலாம். ஆனால் உலகப் பாட்டாளி வர்க்கத்துக்கோ இது ஒரு எதிர்மறை அனுபவம்!*

படிப்பகம்

www.padippakam.com

# பாசிச ராஜீவ் கும்பலின் பழிவாங்கும் வெறி



கேஹார்சிங் சத்வந்த் சிங்

இந்திரா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சத்வந்த் சிங்கும் கேஹர் சிங்கும் கடந்த ஜனவரி 5-ம் நாளன்று தூக்கிலிடப்பட்டு விட்டனர். மரண தண்டனை விதிக்கப் பட்டனர் என்று கூறுவதை விட அவர்கள் கொலை செய்யப் பட்டனர் என்பதே உண்மை!

கேஹர் சிங் - டெல்லியிலுள்ள பொது விநியோக இயக்குனரகத்தில் எழுத்தராகப் பணியாற்றிய 53 வயதான அரசு ஊழியர். இந்திராவைச் சுட்டுக் கொன்று, பின்னர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பியாந்த் சிங்கின் உறவினர். டெல்லியிலேயே குடியிருந்ததால் இரு குடும்பங்களும் அடிக்கடி சந்திப்பது வழக்கம். இதனாலேயே அவர் இந்திராவைக் கொல்ல சதித்திட்டம் தீட்டினார் என்று குற்றம் சாட்டப்பட்டு சிறையிடப் பட்டார். 'பொற்கோவிலுக்கு பியாந்த் சிங்கும் கேஹர் சிங்கும் சேர்ந்து சென்றனர்; அவர்களிருவரும் ஒருமுறை 'குசுகுசு'வெனப் பேசிக் கொண்டனர். இந்திரா செத்த சில நாட்களுக்குப் பின், மதகுருமார்களுடன் மோதும் எவருக்கும் இந்த கதி தான் ஏற்படும் என்று கேஹர்சிங் கூறினார்' - இவை தான் அவர் 'சதி' செய்ததற்கான ஆதாரங்கள்.

சிறையில் அவர் கொடூரமாக சித்திரவதை செய்யப் பட்டார். அரசு சோடித்த பொய் வழக்கை ஒப்புக் கொண்டு அப்ரூவராக மாறினால் விடுதலை செய்வதாக ஆசை காட்டினர். ஆனால் அவர் அதற்கு இணங்க மறுக்கவே அவர் மனைவி முன்னிலையிலேயே மிருகத் தனமாக தாக்கப்பட்டார். மூன்றாந்தர சித்திரவதைகளுடன் குடிநீரில் மலத்தைக் கலந்து பருகச் செய்தும், தனிமைக் கொட்டடியில் அடைத்தும் கூட அவர் அப்ரூவராவதற்கு மறுத்து விட்டார்.

பின்னர் அவர் குடும்பத்தினரை சிறப்பு விசாரணைப் படை இழுத்துச் சென்று சித்திரவதை செய்தது. கேஹர் சிங்கைக் காக்க வழக்கு கொடுத்த அவரது மூத்த மகன் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டுக்குப் பின் விடுவிக்கப் பட்டார். அரசு ஊழியரான அவரது வேலையும் பறிக்கப்பட்ட நிலையில் அவர் டெல்லியில் குடியிருக்க முடியாதபடி தொடர்ச்சியாக தொல்லைகள் கொடுத்து பீதியூட்டியது அரசின் உளவுப் படை.

இதற்கிடையே இந்திரா கொலையைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட தாக்கர் கமிஷனும், சிறப்பு விசாரணைக்காக நியமிக்கப்பட்ட அனந்தராம் கமிஷனும் தமது அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்தன. ஆனால் ராஜீவ் அரசு, எந்த விசாரணைக் கமிஷன் அறிக்கையையும் அவசியமானால் தான் அரசு வெளியிடும் என்று சட்டம் இயற்றி அறிக்கையை வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தது. சத்வந்த் சிங்கும் கேஹர்சிங்கும் அந்த அறிக்கைகளை தனிப்பட்ட முறையில் படிக்கக் கோரியும் கூட அரசு அதை மறுத்தது. ஏன், குடியரசுத் தலைவர் கூட அந்த அறிக்கைகளைப் படிக்க அனுமதி மறுக்கப்பட்டது.

பிரபல வழக்கறிஞர்களான சாந்தி பூஷணும், ராம்ஜெத்மலானியும் 'கேஹர் சிங் நிரபராதி; அவர் மீதான சதிக் குற்றச்சாட்டு பொய்யானது' என்று உச்ச நீதி மன்றத்தில் வாதிட்டனர். அவர்களது வாதங்கள் நியாயமானதாகவும் யதார்த்த நிலையை உரைப்பதாகவும் இருந்ததென்னவோ உண்மை தான். ஆனால் அது சுவற்றின் முன் நடத்திய வாதமாகத் தான் இருந்தது. கேஹர்சிங்கின் மீது உளவுத் துறையினர் சோடித்த சதிக் குற்றத்திற்காக மரண தண்டனையை நீதிபதிகள் உறுதிப் படுத்தினார்களே தவிர, உண்மையை ஆராய அவர்கள் முற்படவில்லை.

கடந்த ஒரு மாத காலமாக கேஹர் சிங்கையும் சத்வந்த் சிங்கையும் தூக்கிலிடுவதைப் பற்றிய வாதப் பிரதிவாதங்களை பத்திரிக்கைகள் எழுதின. பெரும்பாலான மக்கள் - அவர்கள் சீக்கியர்கள் அல்ல - கேஹர்சிங் குற்றவாளி அல்ல என்றும், நிரபராதியைத் தண்டிப்பது நீதிக்கே அவமானம் என்று கூறியிருப்பதை அப்பத்திரிக்கைகள் வெளியிட்டிருந்தன. கடைசியாக, குடியரசுத் தலைவருக்கு கருணை மனுக்கள் அனுப்பப்பட்ட போது கூட பத்திரிக்கைகளும், இந்த வழக்கைத் தொடர்ந்து கவனித்து வருபவர்களும் அவரிடமிருந்தாவது நியாயம் பிறக்கும் என்று நம்பினர். அவர் பிரபல வழக்கறிஞர்களை சந்தித்து விவாதிப்பார்; அரசியலுக்கும், நீதிமன்றத் தீர்ப்புக்கும் அப்பாற்பட்டு நின்று பரிசீலிப்பார்; நீதியின் மிக உயர்ந்த மரபுகளையும் புனிதத்துவத்தையும் காப்பார் என்று பத்திரிகைகள் நம்பிக்கை தெரிவித்தன.

ஆனால் அந்த நம்பிக்கைகள் அனைத்தும் மணல் கோட்டையாகச் சரிந்தது. பாசிச கும்பலின் விசுவாசக் குடியரசுத் தலைவர் கருணை மனுக்களை நிராகரித்து மரண தண்டனையை உறுதிப் படுத்தவே செய்தார். 1988 ஆகஸ்ட் 3ந் தேதியன்று இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப் பட்டிருந்தாலும் அதற்கு எதிரான மனுக்கள், கருணை மனுக்கள் பரிசீலனை என்று 5 மாத காலம் இழுத்தடிக்கப்பட்ட பின்னர் தான் தண்டனை உறுதிப்படுத்தப் பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்டு அதை நிறைவேற்றுவதில் கால தாமதமானால் அந்த தண்டனையை குறைக்க வேண்டும் என்று சட்ட விதிகள் கூறுவதை எடுத்துக் காட்டி கடைசி

டெல்லி திஹார் சிறைக்கு வெளியே கேஹார்சிங் தூக்கிலிடப்பட்ட செய்தியைக் கேட்டு மாளாத் துயரில் ஆழ்ந்த கேஹர்சிங் மகன் - மனைவி, சீக்கிய மக்கள்.



www.padippakam.com




இந்திராவைக் கொன்றவர்களுக்கு தூக்கு தண்டனை என்றால் இந்திரா சாவையடுத்து சீக்கியர்களைக் கொன்றொழித்த காங்கிரசு குண்டர்களுக்கு என்ன தண்டனை? சீக்கியர்களின் போராட்டம்

நேரத்தில் கேஹர்சிங்கின் மகன் மனு செய்த போதிலும் அதுவும் நிராகரிக்கப் பட்டது. தூக்கிலிடுவதற்கான தடை விதிக்கக் கோரியும் மறு விசாரணை கோரியும் மனு செய்த நேரத்தில் அதைப் பரிசீலிக்காமல் குடியரசுத் தலைவர் தண்டனையை நிறை வேற்ற ஒப்புதல் அளித்து ஒரு படுகொலை யைச் செய்து விட்டார் என்று சட்ட வல்லு னர்களும் வழக்கறிஞர்களும் புலம்புவ தைத் தவிர வேறொன்றும் செய்ய முடிய வில்லை.

''அரசாங்கத்துக்கு உண்மையைக் கண்டறிவதில் அக்கறையில்லை. அவர்கள் எங்களைத் தூக்கிலிடுவதில் தான் குறியாய் இருக்கிறார்கள். ஆண்டவனுக்குத் தான் உண்மை தெரியும்'' என்று மரண தண் டனை நிறைவேற்றப் படுமுன் கடைசியாக 'வீக்லி' பத்திரிக்கைக்கு அளித்த பேட்டி யில் கேஹர்சிங் வேதனையுடன் கூறியிருந் தார்.

அது தான் பட்டவர்த்தனமான உண்மை! தன் தாயைக் கொன்ற சீக்கிய சமூகத்தையே பழிவாங்கும் வெறியே பாசிச ராஜீவிடம் மேலோங்கி நிற்கிறது. இந்திரா சாவைத் தொடர்ந்து சீக்கிய சமூகத் தின் மீது கொடூர தாக்குதல் நடத்தி பல்லா யிரக் கணக்கான சீக்கிய அப்பாவி மக்களை நர வேட்டையாடியும்கூட இன்னும் ராஜீவ் கும்பலுக்கு வெறி அடங்கவில்லை. இதோடு, சாதாரண இரு மெய்க் காவலர்கள் இந்திராவைச் சுட்டுவிட் டார்கள் என்பதை விட, ஒரு பெரிய சதிகார கும்பலே பின்னணியில் இருப் பதாகக் காட்டுவது தான் 'உலக மகா தலை வியான இந்திரா'வுக்குப் பெருமை சேர்க் கும் என்பதாலேயே நிரபராதிகளான பல் பீர் சிங்கையும், கேஹர் சிங்கையும் பிடித்து தண்டித்தது. தூக்குக் கயிற்றை எதிர் நோக்கியிருந்த நிரபராதி பல்பீர்சிங் நீண்ட போராட்டத்திற்குப் பின் ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு முன்னர் விடுவிக்கப் பட் டார். ஆனால் அப்பாவி கேஹர்சிங் அநி யாயமாகக் கொல்லப் பட்டுள்ளார்.

நிராயுதபாணியான ஒரு பெண் பிரத மரை அவரது மெய்க் காவலர்களே சுட்டுக் கொன்றது மன்னிக்க முடியாத குற்றம் என் றால், இந்திரா சாவையடுத்து தலைநகரில் சீக்கிய மக்களை ஆயிரக் கணக்கில் காங்கி ரசு குண்டர்கள் கொன்றொழித்தது அதை விட மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம். ஆனால் அந்தக் கொலைக்காரர்கள் இன்று வரை தண்டிக்கப்படவே இல்லை.

பாசிச இந்திராவின் பொற்கோவில் நடவடிக்கைக்குப் பிறகு தமது மத உணர் வுகள் புண்படுத்தப் பட்டதாகக் கருதிய சீக்கியசமூகத்தினரதுஎதிர் நடவடிக்கையின் விளைவு தான் இந்திரா படுகொலை. இதை சீக்கிய சமூகத்தின் மீது அவர் நடத்திய தாக்குதலின் பின்னணியில் பார்க்க வேண் டுமேயன்றி, வெறுமனே பிரதமரை அநியா யமாகச் சுட்டுக் கொன்றுவிட்ட குற்றமாகக் கருத முடியாது.

அதிலும் நிரபராதி கேஹர் சிங்கைத் தூக்கிலிட்டது அப்பட்டமான அரசியல் படுகொலை. அப்படியே ஒருக்கால் சத் வந்த்சிங்கும் கேஹர்சிங்கும் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப் பட்டாலும் கூட அவர்க ளுக்கு மரண தண்டனை விதிப்பது காட்டு மிராண்டித் தனமானது.

புரட்சி யுத்தம் வெடித்துப் பரவும் காலத்தில் எதிரி வர்க்கத்தின் கொடுங் கோலர்களை புரட்சிகர மக்கள் படை அழித் தொழிப்பதும், புரட்சிகர மக்கள் கமிட்டி இக் கொடுங்கோலர்களை விசாரணை மன் றத்தில் நிறுத்தி மரண தண்டனை விதிப்பது தான் நாம் ஏற்கக் கூடியது. அது அரசியல் படுகொலையோ, பழி வாங்கும் வெறியோ அல்ல; புரட்சி யுத்தத்தின் நிகழ்ச்சிப் போக்கில் ஒரு அங்கம்; புரட்சி யுத்தத்திற்கு எதிரான எதிர்ப் புரட்சி கொடுங் கோலர்க ளுக்குத் தரப்படும் தண்டனை. ஆனால் சாதாரண காலங்களில் எப்பேர்பட்ட குற்ற வாளிக்கும் மரண தண்டனை விதிப்பதை நாம் ஏற்க முடியாது. அது காட்டு மிராண் டித் தனமானது; அநாகரீகமானது. பழி வாங்குவதற்கானது.

ஆனால் காட்டு மிராண்டிகள் ஆட்சி யதிகாரத்திலுள்ள நாட்டில் நாகரீகத்தையும் நீதியையும் மனித நேயத்தையும் எதிர் பார்க்க முடியுமா? ஏற்கனவே பல வழக் குகளில் கொடிய குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பதை தடுத்து நிறுத்திய மரபுகளைக் கூட இந்த வழக்கில் தூக்கி யெறிந்து விட்டது பாசிச கும்பல்.

தேசத்தின் தந்தையாக ஆளும் வர்க்கங்கள் சித்தரிக்கும் காந்தியைக் கொன்ற கோட்சேவின் சகோதரர் அக்கொலைச் சதியில் சம்பந்தப் பட்டிருந் தது நிரூபிக்கப்பட்ட போதிலும் கூட அவருக்கு ஆயுள் தண்டனை தான் வழங்கப் பட்டது. தென்னாப்பிரிக்காவில் வெள்ளை நிற வெறி அரசு உயர் அதிகாரிக ளைச் சுட்டுக் கொன்ற சதியில் ஈடுபட்ட ஆறு கறுப்பினப் போராளிகளுக்கு கடந்த ஆண்டு போத்தா அரசு தூக்கு தண்டனை விதித்த போது உலகமே கண்டனக் குரல் எழுப்பியது. உலகின் ஆக மிகக் காட்டு மிராண்டித் தனமான, வெள்ளை நிறவெறி பாசிச போத்தா அரசு பின்னர் ஆயுள் தண் டனையாகக் குறைந்தது.

ஆனால் சர்வதேச பொது மன்னிப்பு அமைப்பும், சர்வதேச வழக்கறிஞர்கள் சங்கமும், பல்வேறு மனித உரிமை அமைப் புகளும், பிரபல வழக்கறிஞர்கள் -கல்வி யாளர்கள் - பத்திரிக்கையாளர்கள் உள் ளிட்ட பலரும் தூக்குத் தண்டனையை நிறுத்தக் கோரியும் பாசிச ராஜீவ் கும்பல் ஏற்கவில்லை. தூக்கிலிட்டுக் கொன்ற சத் வந்த் சிங், கேஹர் சிங்கின் உடலைக் கூட உறவினர்களிடம் ஒப்படைக்காமல் பழி வாங்கும் வெறியோடு தகனச் சாம்பலை மட்டுமே கொடுத்தது பாசிச கும்பல்.

ஆட்சியதிகாரத்திலுள்ள தைரியத்தில் சீக்கிய சமூகத்தைப் பழி வாங்குவதில் இன்று பாசிச ராஜீவ் கும்பல் வெற்றி பெற்றி ருக்கலாம். ஆனால் அதன் விளைவுகள் விரைவில் பாசிச கும்பலுக்கு எதிராகத் திரும்பவே செய்யும்.


## வெளிவந்துவிட்டது!

*போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!*

*புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிவகுப்போம்!*

— மக்கள் விரோத — மோசடித் தேர்த லைப் புறக்கணிக்க வேண்டிய அவசி யத்தை அரசியல் ரீதியாகவும் நடைமுறை உதாரணங்களுடனும் கேலிச் சித்திரங்களு டன் எளிமையாக விளக்கும் 48 பக்கங்களைக் கொண்ட சிறுநூல்.

*— புதிய ஜனநாயகம் வெளியீடு*

*விலை: ரூ.1/-*

*அஞ்சல் செலவு 0.30 பைசா.*

நூலை அஞ்சல் மூலம் பெற விரும்பு வோர் ரூ.1.30 பைசா மதிப்புள்ள அஞ்சல் தலைகளை (STAMPS) அனுப்புக.


படிப்பகம்

ஈழம் :

# பாசிசத் தேர்தல்களும் அமைதிப் படையின் அட்டூழியங்களும்

பாசிஸ்டுகள் வாயைத் திறந்தால் கொஞ்சமும் கலப்படமில்லாத பொய்யே புளுகுகின்றனர். கையை அசைத்தால் பரந்துபட்ட மக்களின் படுகொலைகளுக்கு உத்திரவு போடுகிறார்கள். இது பொதுவான நியதி. இதையே இப்போது இலங்கையிலும், இந்தியாவிலும் நம் கண் முன்னே காண்கிறோம்.

இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிட்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு அந் நாட்டின் பிரச்சினைகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக வெற்றிகரமாகத் தீர்த்து வருவதாக இந்திய - இலங்கை பாசிஸ்டுகள் புளுகுகிறார்கள்.

ஈழத்தின் வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, இலங்கை வாழ் இந்தியத் தமிழருக்குக் குடியுரிமை, தமிழ் ஆட்சி மொழி, அதிகாரப் பகிர்வு போன்ற தமிழர் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப் பட்டாகி விட்டது. விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டு, வடக்கு - கிழக்கு மாகாணத் தேர்தல் ஜனநாயக முறையில் நடந்து, மாகாண கவுன்சிலும், தமிழர் ஆட்சியும் நிலைநாட்டப் பட்டாகி விட்டது.

மக்கள் விடுதலை முன்னணி. (ஜே.வி.பி) மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய தீவிரவாத இயக்கங்களின் பலாத்காரம் - புறக்கணிப்பு மீறி எல்லா மாகாணத் தேர்தல்களும், இலங்கை அதிபர் தேர்தல்களும் வெற்றிகரமாக நடந்து முடிந்து விட்டன. தீவிரவாதிகளின் வன்முறைப் பாதையை நிராகரித்து விட்டு ஜனநாயகத்தை வெற்றிபெறச் செய்து விட்டார்கள், இலங்கை மக்கள். நாடாளுமன்றமும் கலைக்கப் பட்டு பிப்ரவரி மாதம் தேர்தல்கள் நடக்க உள்ளன. ஜே.வி.பி மற்றும் புலிகள் தவிர எல்லாக் கட்சிகளும் அதிலே பங்கேற்கப் போகின்றன.

திட்டமிட்டபடி அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறி வருவதால் "இந்திய அமைதிப் படை" பகுதி பகுதியாக விலக்கிக் கொள்ளப் படுகிறது. ஜெயவர்த்தனே - பிரேமதாசா - ராஜீவ் ஆகியோரின் அரசியல் தீர்க்க தரிசனம் வென்று விட்டது.

இவை இலங்கை - இந்திய பாசிஸ்டுகள் தொடர்ந்து செய்துவரும் பொய் பிரச்சாரங்கள். ரேடியோ, டி.வி முதலிய அரசுப் பிரச்சாரச் சாதனங்களும், அதன் கூலிப் பிரச்சாரகர்களான சோ, ஜெயக்காந்தன், த.பாண்டியன் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளும் இதற்காக முழு வீச்சில் இறக்கி விடப் பட்டுள்ளனர்.

ஆனால் உண்மை வலுவானது. பாசிஸ்டுகள் எவ்வளவு தூரம் முயன்றாலும் அதை மறைத்து விட முடியாது.

## இந்திய இராணுவத்தின் கிரிமினல் குற்றங்கள்

ஈழத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்திய இராணுவம் பல கிரிமினல் குற்றங்கள் செய்து வருகின்றன. எவ்வளவோ ஆதாரங்களுடன் ஈழ மக்கள் அவற்றை நிருபித்த போதும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளே அம்பலப் படுத்திக் கண்டித்த போதும் இலங்கை -இந்திய பாசிஸ்டுகள் மறுத்து வந்தார்கள். இந்திய இராணுவத்தின் கிரிமினல் குற்றங்கள் எல்லை மீறி போய் விட்டன; தலைமையின் கட்டுப்பாட்டையும் மீறி விட்டனர். எனவே குற்றவாளிகளைத் தண்டிப்பதாக சில கண் துடைப்பு நடவடிக்கைகளை இராணுவத் தலைமையே மேற்கொள்ளுவதாக இப்போது செய்திகள் வருகின்றன.

1987 , நவ.21 அன்று 270வது என்ஜினீரிங் ரெஜிமெண்டைச் சேர்ந்த நாயக் பல்தேவ் சிங் என்பவன் திரிகோணமலை கடைவீதியில் கண்மண் தெரியாமல் சுட்டு ஏழு சிவிலியன்களைக் கொன்று நான்கு பேரைப் படுகாயப் படுத்தினான். அவனுடைய மருமகன் முதல் நாளன்று நடந்த சண்டையில் மாண்டதால் ஆத்திரமடைந்து இப்படிச் செய்தானாம்.

மக்கள் திரள் படுகொலை செய்திருப்பதாக இந்திய இராணுவம் ஏற்றுக் கொள்ளும் ஒரு விவகாரம் தான் இது. யாழ் போரின் போது ஏராளமான சிவிலியன்கள் மீது இராணுவ டாங்கிகளை ஏற்றி மிதித்துப் படுகொலை செய்ததில் இருந்து, ஒவ்வொரு கண்ணி வெடிச் சாவுகள் - இழப்புகள் நேரும் போதெல்லாம் மக்கள் திரள் படுகொலைகளில் இந்திய இராணுவம் ஈடுபட்டுள்ளது. புலிகள் என சந்தேகத்துக்குள்ளாகும் இளைஞர்களைச் சித்திரவதை படுகொலை செய்வதற்கென்றே ஒவ்வொரு முகாம்களிடம் தனிப் பிரிவு - இடம் ஒதுக்கப் பட்டுள்ளது. இவை எல்லாம் கிரிமினல் குற்றங்கள் அல்ல; இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் என்று திட்டமிட்டு செய்வதற்கு அனுமதிக்கப் படுகின்றன.

ஈழப் பெண்களை கற்பழிப்பது, ஈழத் தமிழர் சொத்துக்களைச் சூறையாடுவது, புலிகள் எனச் சிறுவர்கள் - இளைஞர்களை முகாம்களுக்கு கடத்திப் போய் ஓரினப் பாலுறவு கொள்ளுவது, மின்னணுக் கருவிகளைக் கடத்துவது ஆகிய பல்வேறு குற்றங்களுக்காக பல சிப்பாய்கள் மீது விசாரனை நடக்கின்றன. 1987 டிச 16ந் தேதி மணி என்கிற சிப்பாய் கொடி காமம் கிராமத்திலே ஒரு திருமணமான பெண்ணைக் கற்பழித்தான், இரண்டு கைக் கடிகாரங்களைத் திருடினான். 1987 டிச. 17ந்தேதி கர்னையில் சிங் என்கிற சிப்பாய்



ஈழ துரோகக் கும்பல் ஈ.பி.ஆர்.எல்.எஃப்க்கு ஆதரவு பெருகி தேர்தலுக்குப் பின் யாழ் நகரில் நடந்த பொதுக் கூட்டத்தில் 5000 பேர் கலந்து கொண்டதாக எடுபிடிகள் புளுகுகின்றனர். அவர்கள் பிரசுரித்த படத்திலே கூட 200, 300 பேருக்கு மேல் இல்லை. அவர்கள் கூட நிர்பந்தமாக இழுத்து வரப் பட்டவர்கள்; சாதாரண உடையணிந்த அமைதிப் படையினர் தான்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

இன்னொரு பெண்ணைக் கற்பழித்தான். 1988 ஜனவரி 13ந்தேதி குல்வந்த் சிங் என்கிற சிப்பாய் யாழ் அருகே மண்டைத் தீவில் தங்க நகைகளைக் கொள்ளையிட்டான். 1988 பிப்ரவரி 1ந்தேதி யாழ். பருத்தித்துறை அருகே தெற்கு துன்னாமலையில் கேம்ராஜ் மீனா என்கிற சிப்பாய் ஒரு சிறுமியைக் கற்பழித்தான். 1988 மே 27ந்தேதி கரவேடி கிராமத்திலே புகுந்து லாதூர்லால் மற்றும் பாபுலால் ஆகிய இரு சிப்பாய்கள் ஒரு திருமணமான பெண்ணைக் கற்பழித்தார்கள்.

1988 ஜனவரி - பிப்ரவரியில் யாழ் கோட்டையில் பதான் சிங் என்பவன் 4 புலிப்படை இளைஞர்களிடம் தகாத உடலுறவு கொண்டான். 1988 ஏப்ரல் 11ந்தேதி மேவாசிங், சுபாஷ்சிங், சுரேஷ்குமார், ஹர்வைர்சிங், ராம்பூல் சிங், பாகிராத் ராம் ஆகிய ஆறு பேரும் சேர்ந்து விசுமாடு கிராமத்துக்குள் புகுந்து பல பெண்களைக் கடத்திக் கற்பழித்தனர். 1987 டிசம்பர் 25ந்தேதி பன்வாரிலால் என்பவன் காதாடி கிராமத்தில் ஒரு பெண்ணைக் கற்பழித்தான்.

இந்தக் குற்றங்களுக்காக இந்திய கிரிமினல் குற்றச் சட்டத்தின் 375, 376 ஆகிய பிரிவுகளின் கீழ் விசாரித்துத் தண்டிப்பதானால் 10 ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை கொடுக்க வேண்டும். எனவே ராணுவச் சட்டப் பிரிவு 69ன் படி, உடனடி மேலதிகாரி விசாரித்து நான்கு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை மட்டுமே தண்டிக்குமாறு செய்து விட முயலுகிறார்கள். இவையும் கூட உள்ளூர் மக்கள் துணிந்து போராடியதால், விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வழக்குகள்தான். இன்னும் இந்திய உளவுப்படை 'ரா' உட்பட பல அமைப்புகள் கொடுத்த ஏராளமான புகார்களுக்கு ஆதாரங்கள் இல்லை என்று கூறி இராணுவத் தலைமை நிராகரித்து விட்டது. (இந்தச் செய்திகளுக்கு ஆதாரம்: இந்தியப் பத்திரிகை சண்டே அப்சர்வர், புதுடில்லி 18-24, '88). இன்னும் ஏராளமான படுகொலைகள், கற்பழிப்பு, கொள்ளை, கடத்தல் குற்றங்கள் பற்றி செய்திகள் நமக்கு நேரடியாகவே கிடைக்கின்றன.

உலகிலேயே கேடு கெட்ட எல்லா ஆக்கிரமிப்பு இராணுவங்களையும் மிஞ்சி விடும் அட்டூழியங்கள் அக்கிரமங்களில் ஈடுபட்டுள்ள இந்திய இராணுவம் தனது அமைதிப்பணியை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்புவதாக புளுகுகிறார்கள். இது, எதிர்வரும் தமிழகச் சட்டமன்ற மற்றும் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலுக்காகச் செய்யும் பித்தலாட்டமே தவிரவேறு ஒன்றுமில்லை. இந்திய இராணுவம் இலங்கையிலே நிரந்தரமாகத் தங்கிவிடுவதற்கான உரிமையை -ஏற்பாட்டை இந்திய-இலங்கை ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளது. 1000 கோடி ரூபாய்க்கு மேலே செலவழித்து, 1500 பேருக்கு மேலே பலிகொடுத்து ஈழத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்திய இராணுவம் தெற்கு ஆசிய பிராந்திய ஆதிக்கத்தை விட்டுக் கொடுத்து விலகி விடும் என்பது பச்சைப் பொய்தான்!

## ஈழத்தமிழன் ரத்தத்திலே நஞ்சு கலக்கும் பாசிஸ்டுகள்

இந்தியப் பிரதமர் ராஜீவின் தயவினால் ஈழத்தமிழர் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேறி நல்வாழ்வுக்குத் திரும்புவதாகக் கூலிப் பிரசாரகர்கள் புளுகுகிறார்கள். தமிழனுக்கு ஒரு மாநிலம், தமிழனுக்கு ஒரு ஆட்சி -மந்திரி சபை - முதல்வர் .தமிழ்க்கு ஆட்சிமொழித் தகுதி. தமிழனுக்கு அதிகாரப்பகிர்வு. இலங்கைத் தமிழனுக்குக் குடியுரிமை. இவை எல்லாம் ராஜீவின் கருணையினால் கிட்டிய சலுகைகள். சாதனைகள் என்று புளுகுகிறார்கள். புலிகளின் வன்முறைக்கு எதிராக ஜனநாயக முறையில் தேர்தல் நடத்திவிட்டதாக ஈழத்தமிழர் பெரும்பான்மையினர் வாக்களித்ததாக பெருமை அடித்துக் கொள்ளுகிறார்கள். அத்தனையும் பித்தலாட்டம்!

ஈழத்திலே தேர்தல் நடத்துவதற்கான அமைதியான, சாதகமான சூழ்நிலை இல்லை என இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள பல அரசியல் கட்சிகளும், சேவை இயக்கங்களும், பத்திரிகைகளும் எச்சரித்தன. அத்தனையையும் நிராகரித்து விட்டு எப்படியாவது ஈழத்திலே ஒரு கைக்கூலி -பொம்மை அரசை நிறுவுவது என்று திட்டமிட்டு இந்திய-இலங்கை பாசிச ஆளும் கும்பல்கள் செயல்பட்டன. ஈழத்தில் ஜனநாயகத் தேர்தல் நடந்ததாகக் கூறும் மோசடிகளும் இப்போது அம்பலமாகி விட்டன.

ஈழத்தின் வடபகுதியிலே தேர்தல் நடத்தலே முடியாது என்பதால் போட்டியின்றி வெற்றி என்கிற நாடகமாடியது இந்திய இராணுவமும் அரசும். ஏற்கனவே தனது கைக்கூலிகளான ஈ.பி.ஆர்.எல். எஃப் ஈ.என்.டி.எல்.எஃப், ஆகியோரிடையே தொகுதிகளை பதவிகளைப் பகிர்ந்தளித்து, இராணுவத்தை வைத்து வேட்பு மனுக்களை தாக்கல் செய்தது. போட்டியிட விரும்பிய முஸ்லிம் காங்கிரசாரை விரட்டியடித்தது. வேட்பு மனுக்களைப் பெறவும், தேர்தலை நடத்தவும் ஈழப் பகுதி அதிகாரிகள் மறுத்துவிடவே, கொழும்பிலிருந்து இந்திய இராணுவ விமானங்கள் மூலம் சிங்கள அதிகாரிகளைக் கொண்டு வந்து குவித்தது.

வேட்பு மனுத்தாக்கல்களின் போதும், கிழக்கில் வாக்குப்பதிவின் போதும் இராணுவத்தைக் குவித்து ஊரடங்கு விதித்தது. வாகனங்கள் போக்குவரத்துக்கள் எல்லாம் தடுக்கப்பட்டது. வாக்காளர் அடையாள அட்டைகள் மக்களிடம் விநியோகிக்கப்படவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூலிப்படையினரிடம் மொத்தமாக் கொடுக்கப்பட்டது. 5000 அதிகாரிகளை வைத்து, 576 வாக்குச் சாவடிகள் மூலம் வாக்குப் பதிவு நடப்பதாகக் கூறியது. ஆனால் தேர்தலன்று 252 சாவடிகளை ரத்து செய்துவிட்டு 600 சிங்கள அதிகாரிகளை வைத்து 324 சாவடிகளில் மட்டும் வாக்குப்பதிவு நடந்ததாக் கூறியது. ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூலிப்படையினர் ஓரிரு சாவடிகளில் நிர்பந்தமாகத் திரட்டப்பட்ட மக்களைப் பத்திரிக்கையாளர்களிடம் காட்டி பெரு திரளான மக்கள் வாக்களித்ததாகப் புளுகினர்.

இனக்கலவரங்களால் குடிபெயர்ந்த தமிழர்கள் மீண்டும் குடியமர்த்தப்படாத நிலை உள்ள வாக்காளர்களுக்கும் அடையாள அட்டை தரப்படவில்லை; தேர்தலன்று பல வாக்குச் சாவடிகள் ரத்து செய்யப்பட்டன; வேறு சாவடிகள் குறிப்பிடவோ, அங்கு போகவாகனமோ இல்லை. இந்நிலையில் 60 சதவிகித மக்கள் வாக்களித்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அங்கீகரித்துவிட்டதாக புளுகுகிறது இந்திய-இலங்கை பாசிச கும்பல். தேர்தல் பணிகள் அனைத்துக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப் மற்றும் ஈ.என்.டி.எல்.எஃப் பிரச்சாரங்களுக்கும் இந்திய இராணுவ வாகனங்களுமே பயன்படுத்தப்பட்டன. இந்திய இராணுவ மேற்பார்வையிலேயே, நேரடித் தலையீட்டிலேயே தேர்தல்கள் நடத்தப்பட்டன. உண்மையில் பெரும்பான்மையான மக்கள் தேர்தலைப் புறக்கணித்து விட்ட நிலையில் இந்திய இராணுவத்தினர் முன்னிலையில் அவர்களின் கைக்கூலிகளே வாக்குச் சீட்டுகளில் முத்திரை குத்திக் கொண்டனர்.

கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூட்டணியைப் பெரும்பான்மையான ஈழத்தமிழர்கள் ஆதரிப்பதாக வேறு புளுகுகின்றனர். ஆனால் பிறகு நடந்த இலங்கை அதிபர் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் பகிரங்கமாக ஆதரித்துப் பிரச்சாரம் செய்த இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அப்படியே ஆதரிக்கும் போலி கம்யூனிஸ்டு - போலி சோசலிஸ்டு அணி வேட்பாளர் ஓசி அபய குணசேகரா மிகக் குறைவான வாக்குகளே பெற்றார். சிங்கள வெறியர் இந்திய-இலங்கைஒப்பந்தத்தைஏற்காதவர்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப் பிரசாரம் செய்த ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரேமதேசா பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றார். அப்படியானால் கிழக்கு மாகாண மக்களின் விருப்பம் என்ன? வாய் பொத்திக் கொண்டன பாசிச கும்பல்களும் கைக்கூலிகளும்.

அதேபோல வட ஈழத்தில் போட்டியின்றி வெற்றி பெற்றதாகக் கூறிக் கொள்ளும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்க்கு ஆதரவு பெருகுவதாக வேறு புளுகுகின்றனர். தேர்தலுக்குப் பிறகு யாழ் நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் 5000 பேர் வந்ததாகக் கூறிக் கொள்கின்றனர். இதை நிரூபிக்க அவர்கள் பிரசுரித்துள்ளனர்: அதுவே அவர்களைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. இங்கே ராஜீவ் காந்தி உயிருக்குப் பயந்து கொண்டு நடத்தும் பொதுக்கூட்டங்களைப் போல மேடையிலிருந்து பல அடி தூரம் தள்ளி பார்வையாளர்கள். அதுவும் 200, 300 பேருக்கு மேலே கிடையாது. அவர்க



படிப்பகம்

ளும் நிர்பந்தமாக இழுத்து வரப்பட்ட சிறுவர்கள், முதியவர்கள், சாதாரண உடையில் உள்ள இந்திய இராணுவத்தினர், மற்படி அவர்களின் கைக்கூலி அமைப்பினர்.

வட ஈழத்திலும் இந்திய-இலங்கை ஒப்பந்த ஆதரவு பெருகுவதாக கூறுவது பொய்யென நிரூபிக்கும் மற்றொரு ஆதாரம் அதிபர் தேர்தலிலே 20 சதவிகிதத்துக்கும் குறைவானவர்கள் வாக்களித்ததாகவும், அதிலும் பெரும்பான்மையினர் ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்ப்பதாகக் கூறும் பண்டாரநாயகாவுக்கே வாக்களித்ததாகவும் இந்திய-இலங்கை ஆளும் கும்பல்களே ஒப்புக் கொள்ளுகின்றன.

மேற்கண்ட பொய்யான காரணங்களைக் கூறி விடுதலைப் புலிகள் மக்களிடையே செல்வாக்கு இழந்து விட்டனர். இராணுவ ரீதியிலும் ஒடுக்கப்பட்டு விட்டனர் என்கிறது ஜெயவர்த்தனே - பிரேமதாசா - ராஜீவ் கும்பல். இந்திய இராணுவத்தின் மிருகபலம் - படுகொலைகளால் புலிகள் பலவீனமடைந்து பின்வாங்கி இருந்தாலும் அழிந்து விடவோ, போரிடும் சக்தியை இழந்து விடவோ இல்லை என்று இந்திய -இலங்கை மற்றும் பிற வெளிநாட்டு ஏடுகள் கணிக்கின்றன. ஈழக் கிராமப் புறங்களில் காடுகளில் புலிகளுடன் பேட்டி கண்டு புகைப்படங்களுடன் நேரடிச் செய்திகள் தருகின்றன. மற்ற பிற புரட்சிகர, ஜனநாயக சக்திகளுடன் இணைந்து, பரந்து பட்ட மக்களைச் சார்ந்து விடுதலைப் போரை நடத்தத் தவறியபோதும், சிங்கள இன வெறிக்கும் இந்திய ஆக்கிரமிப்புக்கும் எதிராக இன்னமும் போரிடும் சக்தியாக இருப்பதால் ஈழ மக்களின் ஆதரவை விடுதலைப் புலிகள் பெறுகிறார்கள் என்பதே உண்மை.

எனவேதான் புலிகளை எதிர்கொள்வதற்கு ஏற்கனவே திட்டமிட்டபடி ஈழத்தில் ஒரு பொம்மை ஆட்சியை நிறுவியவுடன் அடுத்த கட்டமாக தமிழனைக் கொண்டே தமிழனைக் கொல்லும் சதியை நிறைவேற்றுவதற்கான வேலைகளில் ஆளும் பாசிச கும்பல்கள் இறங்கி விட்டன. தனது கைக்கூலிகளுக்கு ஏராளமான ஆயுதங்களும், பயிற்சியிடம் கொடுத்து ஈழ இளைஞர்களை வேட்டையாடுவதில் இறக்கிவிட்டிருக்கிறது இந்திய இராணுவம்.



ஈழத் தமிழனை வைத்து ஈழத் தமிழனைக் கொல்ல குடிமக்கள் சேவைப் படையைக் கட்டி ஆயுதப் பயிற்சியளித்து வருகிறது இந்திய ராணுவம். மட்டக் கிளப்பு பயிற்சி முகாமில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இளைஞர்கள்.

''ஒவ்வொரு நாளும் சாலை ஓரங்களிலே சில இளைஞர் பிணங்களைப் பார்க்கிறோம். ஆனால் யார் அவர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என்று தெரியவில்லை'', என்கிறார் 70 வயதான ஒரு பெரியவர். ''ஒவ்வொரு நாளும் 2, 3 பிணங்களை நாங்கள் எடுக்கிறோம் அவை புலிகளின் ஆதரவாளர்களுடையன என்று சொல்கிறார்கள்'' என்கிறார் யாழ் கோட்டையில் உள்ள ஒரு சிங்களப் போலீசுக்காரர். இவையெல்லாம் ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூலிப்படையினர் நடத்தும் படுகொலைகள் என்று இந்தியப் பத்திரிகையான ''தீவீக்'' எழுதுகிறது.

இந்த நரவேட்டையை அமைப்பு ரீதியாக, சட்டபூர்வமாகச் செய்வதற்கென்றே ''குடிமக்கள் சேவைப்படை'' ஒன்றைக் கட்டி ஆயுதப் பயிற்சியளித்து வருகிறது இந்திய இராணுவம். ஏற்கனவே உள்ள கூலிப்படையினரோடு 16 லிருந்து 22 வயதான எல்லா ஈழ இளைஞர்கள் கட்டாயமாக இந்தப் படையிலே சேர்க்கப்படுகிறார்கள். வியத்நாமை ஆக்கிரத்துக் கொண்டு அமெரிக்க இராணும் பின்பற்றிய வியத்நாமியமயமாக்கும் முறை; வாட்டர்கேட் ஊழல் பேர்வழி நிக்சன் வகுத்துக் கடைப்பிடித்த அதே உத்தியை போஃபார்ஸ் ஊழல் பேர்வழி ராஜீவ் காப்பியடிக்கிறார். ஈழத்தமிழனை வைத்து ஈழத்தமிழனைப் படுகொலை செய்வதற்கு ஏவிவிடுகிறார். அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைக்கு நேர்ந்த அதே கதிதான் இந்தியக் கொலைவெறி இராணுவத்துக்கும் ஏற்படும் என்பது நிச்சயம்!

## ''பாசிச தேர்தல்கள் பாசிச ஜனநாயகம்''

அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு பாசிச முறையிலே தேர்தல்கள் நடத்துவதும் துப்பாக்கி முனையிலே ஜனநாயகத்தை தூக்கி நிறுத்துவதும் இப்போது பாசிஸ்டுகளின் வழக்கமாகி விட்டது. இலங்கை அதிபர் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும், ''துப்பாக்கித் தோட்டாக்களை ஓட்டுச் சீட்டுகள் வென்று விட்டன'' என்று மிதப்போடு அறிவித்தார் பாசிச பிரேமதாசா. ஜனநாயகத்தின் வெற்றி என்று பீற்றிக் கொள்ளும் இலங்கை அதிபர் தேர்தல்கள் எந்தச் சூழ்நிலையில் எப்படி நடத்தப்பட்டன என்பதைக் கவனித்தாலே தெரியும் இது ''பாசிச தேர்தல்கள்! பாசிச ஜனநாயகம்'' என்பது.

இந்திய- இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு இதுவரை 600 பேரை ஜே.வி.பி.யினர் அழித்தொழித்துள்ளனர். அவர்கள் பாசிச ஜெயவர்த்தனே கட்சி தலைவர்கள், அரசு அதிகாரிகள் -இராணுவத்தினர், போலீசுக்காரர்கள். அவர்களின் கைக்கூலிகள் ஆகும். இலங்கை அதிபர் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு அழித்தொழிப்புகளோடு தொடர்ந்து பல நாட்கள் பொது வேலை நிறுத்தங்கள் -ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். பள்ளி -கல்லூரிகள் மூடப்பட்டன. அரசு அலுவலகங்கள், தனியார் கடைகள், சந்தைகள், ஆலைகள், வங்கிகள், பஸ்-ரயில்போக்குவரத்துகள் அனைத்தும் நின்று போயின. வேலை நிறுத்தங்களை அனுமதிக்கும் கடைகள் -ஆலைகள் -நிறுவனங்களை அரசுடைமையாக்குவதாக உத்திரவு போட்டும் அரசு ஊழியர்கள் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதாக எச்சரித்தும், பல நாள் ஊரடங்கு உத்திரவு போட்டும் போராட்டங்கள் நீடித்தன. ஆர்ப்பாட்டம் செய்பவர்களைக் கண்டதும் சுடவும், தெருக்களிலேயே பிணங்களை எரிக்கவும் உத்திரவு போட்டது பாசிச ஜெயவர்த்தனே அரசு.

40,000 இராணுவப் படையினரையும், கூடவே 'பச்சைப் புலிப்படை'' என்னும் ஆளும் கட்சி கொலைகாரர்களையும் ஏவியது. ''பலபத்து ஜே.வி.பி.யினரையும், நூற்றுக்கணக்கான அதன் ஆதரவாளர்களையும் பிடித்துக் கொன்று தெருக்களிலேயே வீசியது''. ''இராணுவமும் அதன் துணைப் படைக் குழுக்களும் அதன் பாணியிலான பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டன. அம்பிதியே கிராமத்தில் அவர்களுடைய வீடுகளில் இருந்து இழுத்துப் போன மூன்று பையன்களின் பிணங்கள் தெருக்களிலே இறைந்து கிடந்ததை பத்திரிகையாளர்கள் பார்த்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தலையிலே சுடப்பட்டுக் கிடந்தனர்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

ஜே.வி.பி.யினர் என்று சந்தேகப்படும் பலரையும் காணவில்லை என்று பல்வேறு மனித உரிமை அமைப்புகள் புகார் கூறுகின்றன. அவர்கள் சிறைப்பட்டிருக்கலாம் அல்லது ''சுடுவேலா'' அருகே நடந்ததைப் போல கொன்று உடனடியாக எரிக்கப்பட்டிருக்கலாம்'' (அமெரிக்க நியூஸ் வீக் '88 டிசம்பர் 19)

இவ்வளவு பயங்கரத்துக்கிடையேயும் தேர்தல் அன்று 40 பேர் கொல்லப்பட்டனர். மொத்தம் 55 சதவிகித்தினர் ஓட்டளித்ததாக அரசு கூறுகிறது. ''தேர்தலே மோசடி. மோனாராகலா பகுதியில் 49 சாவடிகளில் தேர்தல் அதிகாரிகளே இல்லை. ஆளும் கட்சி குண்டர் படையினரால் மற்ற கட்சியினர் விரட்டப்பட்டனர். வோட்டுப் பெட்டிகளை போலீசு நிலையத்துக்குக் கொண்டு சென்று ஆளும் கட்சி முத்திரை குத்திக் கொண்டனர்'' என்று பண்டார நாயகா புலம்புகிறார். வழக்கமாக 80% சதவிகிதம் ஓட்டளிப்பார கள். இப்போது அரசு கணக்குப்படியே மொத்தம் 55% சதவிகிதத்தினரே வாக்களித்தனர். தேர்தல் நடந்தபோதும் பிறகும் ஊரடங்கு உத்திரவு இருந்தது. கொழும்பு உட்பட நகரங்கள் வெறிச்சோடிக்கிடந்தன என்று ராஜீவ் ஆதரவு சண்டே ஏடு எழுதுகிறது. ஆக, அரசு பயங்கரவாதத்தின் கீழே நடந்த இதை பாசிச தேர்தல் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியத் தமிழர் காங்கிரஸ் கட்சியின் தலைவர்,, பதவிக்காக நடத்திய பேரத்தில் பிரேமதாசாவை ஆதரித்ததால் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். உடனேயே ஓட்டுப் பொறுக்குவதற்காக அடித்த இந்திய எதிர்ப்பு எல்லாம் காற்றில் பறக்கவிட்டு விட்டு பாசிச ராஜீவுடன் கை கோர்த்துக் கொண்டார். அடுத்து வரும் தமிழக சட்ட மன்ற மற்றும் இலங்கை நாடாளுமன்ற தேர்தலைக் குறி வைத்து படை விலக்கல் நாடக மாடுகிறார்கள் இரண்டு பாசிஸ்டுகளும்.

துப்பாக்கி முனையிலே தேர்தல்களை நடத்தி விடுவதால் ''அமைதி-ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதாக அவர்கள் நம்பினால் வரலாற்றில் இருந்து பாடங்களை கற்பதற்கு வலுக்கட்டாயமாக மறுக்கிறார்கள் என்றே பொருளாகும். அசாமிலும், பஞ்சாபிலும் இப்படித்தான் தேர்தல்களை நடத்தினார்கள். ஆனால் பிரச்சினைகள் ஏதுவம் தீரவில்லை; மாறாக வளர்ந்து உக்கிரமாகின. அதேபோல இலங்கை-இந்திய மக்களுக்கு எதிராக இரு நாடுகளின் பாசிஸ்டுகள் நடத்தும் மோசடித் தேர்தல்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வில்லை. இந்திய ஆக்கிரமிப்பு -பிராந்திய ஆதிக்க வெறியும், கொள்கையும், நடைமுறையும் நீடிக்கும்வரை, சிங்கள பேரினவாத ஒடுக்கு முறையும், பாசிச ஆட்சியும் நீடிக்கும் வரை அவற்றுக் கெதிரான போராட்டங்கள் நீடிக்கவே செய்யும்; வளரும்; வெற்றி பெறும்!

— மாணிக்கவாசகம்

# புரட்சிக்கு அறைகூவல் விடுத்த தேர்தல் புறக்கணிப்பு மாநாடு



அவதூறு, அடக்கு முறைகளால் நக்சல்பாரி அரசியலை இனி மேலும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்த முடியாது! நக்சல்பாரி அரசியலை உயர்த்தி பிடிக்கும் புரட்சிகர அமைப்புகளுக்கு மக்கள் காட்டும் ஆதரவும் அரவணைப்பும், அதன் லட்சியப் பாதையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் செயல் வீரர்களின் எள்ளளவும் சுயநலமற்ற உழைப்பும் தியாகமும் அதன் அளவிலும் தரத்திலும் நாளும் உயர்ந்து வருவது இதைத் தான் நிருபிக்கிறது.

போலி ஜனநாயகத் தேர்தல் பாதையை புறக்கணித்து புதிய ஜனநாயகப் புரட்சிக்கு மக்களை அறைகூவி அழைக்கும் நக்சல்பாரி அரசியலின் புரட்சிப் பாதையில் சிறிதும் பிறழாமல் தொடர்ந்து பயணம் செய்யும் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி இணைந்து 9.1.89 அன்று திருச்சியில் நடத்திய போலி ஜனநாயகத் தேர்தல் புறக்கணிப்பு மாநாடு மலரப் போகும் புதிய ஜனநாயகப் புரட்சிக்கு கட்டியங்கூறும் வசந்தத்தின் இடி முழுக்கமாக அமைந்தது. ஆளும் வர்க்கங்களையும் அதன் அடிவருடிக் கூட்டத்தையும் அஞ்சி நடுநடுங்க வைத்தது.

திருச்சி - ருக்மணி திரையரங்கு அருகில் அமைக்கப் பட்டிருந்த நக்சல்பாரி தியாகிகள் நினைவரங்கத் திடலில் போலி ஜனநாயகத் தேர்தல் புறக்கணிப்பு மாநாடு தனக்கே உரிய பாட்டாளி வர்க்க போர் குணத்தோடு ஆரம்பமானது. உலகம் முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த புரட்சிகர தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தி ம.க.இ..க., வி.வி.மு. ஆகிய இரு அமைப்புகளின் கொடிகளை அவ்வமைப்பின் தோழர்கள் கோவன், நாராயணன் ஆகியோர் ஏற்றி வைக்க மாநாடு எழுச்சியுடன் துவங்கியது. மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் மோகன் மாநாட்டிற்கு தலைமை தாங்கி கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்.

கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய ம.க.இ.க. பொதுச் செயலர் தோழர் மருதையன், இணைச் செயலர் தோழர் கதிரவன், அம்மாப் பேட்டை ஒன்றிய வி.வி.மு. தோழர் மாது ஆகியோர், அழுகி நாறும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை, அதை வேரோடும் வேரடி மண்ணோடும் தூக்கி எறிய வேண்டிய அவசியத்தை -அதற்கு மாற்றாக ஆயுத தாங்கியப் புரட்சியில் மலரப் போகும் புதிய ஜனநாயக புரட்சி அரசாங்கத்தின் உள்ளடக்கத்தை மார்க்சிய ஒளியில் மக்களுக்கு புரியும்படி மிகவும் எளிமையாக விளக்கினார்கள்.

விலை போகும் எம்.எல்.ஏ.க்கள், விலை மாதர்களுடன் சுற்றும் எம்.எல்.ஏ.க்கள், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் மந்திரிகள், இவர்களைப் பாதுகாக்கும் இராணுவம், போலீசு, நீதிமன்றம், அதிகார வர்க்கம். இவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு உழைக்கும் மக்களின் மீது கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறைகள் இதை முடிவுக்கு கொண்டு வர முடியாத அதிகாரமற்ற அரட்டை மடம் தான் சட்டமன்றம் பாராளுமன்றம். உண்மையில் மக்களை ஆளுவது மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அதிகார வர்க்க கூட்டம் தான் என்பதை நடைமுறை உதாரணங்களுடன் மக்களின் மனதில் பசுமரத்தாணிப் போல பதிய வைத்தனர்.

கருத்துறைகள் வழங்கிய தோழமை அமைப்புகளான, மக்கள் ஜனநாயக இளை

பொங்கியெழுந்து வீசும் புரட்சிப் பேரலை





படிப்பகம்

www.padippakam.com




வசந்தத்தின் இடி முழக்கமாய் எதிரொலிக்கும் புரட்சிகர கலை நிகழ்ச்சிகள்

ஞர் கழகம் பிரதிநிதி தோழர் ஞானம், பகத் சிங் இளைஞர் முன்னணி தோழர் ராஜகுரு, புதிய ஜனநாயக புரட்சிகர ஏட்டின் ஆசிரியர் குழு சார்பாக அதன் ஆசிரியர் தோழர் மதியழகன் ஆகியோர் மாநாடு வெற்றி பெற புரட்சிகர வாழ்த்துக்கள் தெரிவித்து இப்புரட்சிகர பயணத்தின் நீண்ட நெடிய போராட்டத்திற்கு தங்கள் அமைப்புகளும் தோளோடு தோள் நிற்கும் என்று குளுரைத்தனர்.

புரட்சிகர எழுத்தாளர்கள் அறிவு ஜீவிகள் கழகம் (R.W.A.I.A) மேற்கு வங்கம் ஆவாகன் நாட்டிய மஞ்ச் (A.N.M) மகாராட்டிரம் மற்றும் பாசிச எதிர்ப்பு மாநாடு (A.F.C) கேரளா, ஆகிய வெளி மாநிலங்களின் புரட்சிகர அமைப்புகளிடமிருந்து வந்திருந்த மாநாட்டு வாழ்த்துரைகள், போலி ஜனநாயக தேர்தல் பாதையை ஆதரிக்கும் போலி சிவப்புகளை மக்கள் இனங்கண்டு ஒதுக்குமாறும் அவற்றுக்கு எதிராக சளையாத போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுமாறும் மாநாட்டையும் மக்களையும் அறைகூவி அழைத்தது.

மாலை சுமார் 4 மணி அளவில் 3000க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்களின் பங்கேற்புடன் துவங்கிய பேரணியும், இப்ராகிம் பூங்கா அருகில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் 5000க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துக் கொண்டதும் நக்சல்பாரி அரசியலின் வெற்றியை அதன் மேலாண்மையை எதிரிகளுக்கு பறைசாற்றியது.

பட்டொளி வீசிய செம்பதாகைகளையும், போலி ஜனநாயகத் தேர்தல் பாதையை தோலுரித்து, புதிய ஜனநாயகப் புரட்சிக்கு மக்களை அறைகூவி அழைக்கும் முழக்கங்கள் வடிக்கப்பட்ட அட்டைகளையும் ஏந்தி பேரணியில் கலந்துக் கொண்ட உழைக்கும் மக்கள், 5 கிலோ மீட்டருக்கும் அதிகமான பேரணி பயணப் பாதை முழுவதும் முழக்கங்களை இடியென முழங்கிச் சென்றனர். பேரணியில், பீரங்கி திருடன் ராஜீவ் மாதிரி ஒரு தோழர் அலங்கரிக்கப்பட்டு, அவர் அருகில் போ..ஃபர்ஸ் பீரங்கி மாதிரி அட்டையில் செய்யப்பட்டிருந்த காட்சி விளக்கம், உழைக்கும் மக்களுக்கு ஊழல் ராஜீவின் உண்மை முகத்தை எளிமையாக புரிய வைத்தது.

மாநாட்டுப் பேரணி




பொதுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய உசிலை வட்டம் வி.வி.மு. தோழர் கே.பி.ராமசாமி, சிறப்புரையாற்றிய ம.க.இ.க. தஞ்சைக் கிளை செயலர் தோழர் காளியப்பன், கல்லைவட்ட வி.வி.மு. தோழர் கதிர்வேலன், ம.க.இ.க.வின் மையக் கலைக்குழுச் சார்பாக கலை நிகழ்ச்சிகள் நடத்திய தோழர்கள் அனைவரும் ஓட்டுப் பொறுக்கிக் கட்சி தலைவர்களின் ஊழலையும் ரௌடித் தனத்தையும் அக்கட்சிகளின் பிழைப்புவாத தேர்தல் கூட்டணிகளையும், ஒட்டுண்ணி அரசு எந்திரத்தின் அட்டூழியங்களையும் அங்குலம் அங்குலமாக தோலுரித்துக் காட்டினார்கள்.

மாநாட்டு நிகழ்ச்சிகளை ஒற்றறிய வந்த ஓட்டுப் பொறுக்கி கட்சிகளின் உள்ளூர் 'பிரபல' தலைவர்கள், அடக்குமுறை அரசு எந்திரத்தின் உயர்மட்ட போலீசு அதிகாரிகள் உட்பட உளவறிய வந்த ஆளும் வர்க்கத்தின் அடிவருடிகள் கூட நக்சல்பாரி அரசியலின் மேலாண்மையை தங்களுக்குள் ரகசியமாக பேசி ஒப்புக் கொள்ளுமளவு மாநாடு எதிரிகளுக்கு பெரும் சாட்டையடியாய் அமைந்தது.

பெரும் புயலாக தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் 15 நாட்களுக்கும் மேலாக மாநாட்டுச் செய்தியை எடுத்துச் சென்று உழைக்கும் மக்களின் ஆதரவை திரட்டிய அமைப்பின் தோழர்களுக்கும் தோழமை அமைப்புகளுக்கும் மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட உழைக்கும் மக்களுக்கும் மாநாட்டுக் கமிட்டி தனது புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டது. போலி ஜனநாயகத் தேர்தலையும், அரசு எந்திரத்தையும் தோலுரிக்கும் சிறு நந்திரக் காட்சியுடன் நள்ளிரவு 11.30 மணியளவில் மாநாடு சர்வ தேசீய கீதத்துடன் முடிவடைந்தது.

ஆளும் வர்க்கங்களும் அதன் வருடிக் கூட்டங்களும் அஞ்சி நடுநடுங்க இதோ! ரத்த ஆற்றைக் கடந்து நக்சல்பாரி புரட்சியாளர்கள் மக்களுடன் இணைகிறார்கள்! எந்த சக்தியாலும் இதை இனி தடுத்து நிறுத்த முடியாது என்பதை இம்மாநாடு அழுத்தம் திருத்தமாக நிருபித்து விட்டது! ●



படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசின் ஐந்தாம்படையாக போலிக்கம்யூனிஸ்டுகள்

ஓட்டுப் பொறுக்குவதையே புரட்சிகர நடவடிக்கையாக சித்தரித்து வரும் நாற்காலிக் கம்யூனிஸ்டுகளான 'மார்க்சிஸ்டுகள்', பொருத்தமாக 'பூர்ஷ்வா' கட்சியாக சீரழிவதை நோக்கி வேகமாக முன்னேறி வருகிறார்கள். அண்மையில் கேரளத்தில் நடந்தேறிய அக் கட்சியின் 13வது அகில இந்திய மாநாடு இதை மேலும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

''எளிமையும், கடும் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்ட கம்யூனிசக் கலாச்சாரத்திற்கு முற்றிலும் எதிராக முதலாளித்துவக் கட்சிகளைப் போல ஆடம்பரமாகவும் பணத்தை வாரியிறைத்தும் மார்க்சிஸ்டுகள் இம் மாநாட்டை நடத்தியுள்ளனர்'' என்று பிரபல மலையாள எழுத்தாளரும் 'மார்க்சிஸ்டு' கட்சியின் முன்னாள் ஆதரவாளருமான தகழி சிவசங்கரப் பிள்ளையே கூறுமளவுக்கு போலிகள் கூத்தடித்தனர். இங்கே தமிழகத்தில் ஓட்டுப் பொறுக்கிகள் தமது கட்சிப் பேரணிகளில் குதிரை, மோட்டார் சைக்கிள் அணிவகுப்பு நடத்தி கவர்ச்சி காட்டி மக்களைக் கவர்ந்திழுப்பதைப் போலவே, போலிகளும் யானைகளைக் கொண்டு வந்து அலங்கார அணிவகுப்பு நடத்தி தமது மாநாட்டைச் சிறப்பித்தனர். இதுவும் போதாதென்று கட்சியின் பொதுச் செயலாளர் நம்பூதிரிபாடின் அங்க அசைவுகளைசினிமாப் படம் எடுத்து இதர ஓட்டுக் கட்சிகளைப் போலவே தனிநபர் துதிபாடவும் செய்தனர்.

இத்தனை வாணவேடிக்கைகளை நடத்தி, மலையைத் தோண்டி எலியைப் பிடித்த கதையாக தேச ஒற்றுமைதான் இன்றைய பிரதான கடமை; வகுப்புவாத - பிரிவினை வாதத்தை முறியடிப்பதே எமது லட்சியம் என்று தீர்மானம் போட்டுள்ளார்கள். கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி எதைச் சொல்லி ஓட்டுப் பொறுக்கியதோ அதுவே இன்று 'மார்க்சிஸ்டு'களின் லட்சியக் கடமையாகி விட்டது.

எனவே அடுத்து வரப் போகும் பொதுத் தேர்தலில் ஒருபுறம் ராஜீவ் அரசுக்கு எதிராகவும், மறுபுறம் வகுப்புவாத -பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராகவும் இரு கைகளாலும் போராடப் போகிறார்களாம். அதற்காக இடதுசாரி ஜனநாயக மதச் சார்பற்ற சக்திகளை ஐக்கியப் படுத்துவதை முக்கிய பணியாக மேற்கொள்ளப் போகிறார்களாம்!

இங்கே தமிழகத் தேர்தலில் கருணாநிதியிடமும், ஜெயலலிதாவிடமும், மூப்பனாரிடமும் சீட்டுப் பிச்சை கேட்டு ஆளுக்கொரு பக்கமாக பிரிந்து கிடக்கும் போதுதான், வெட்கமின்றி மாநாட்டில் இப்படித் தீர்மானம் போடுகிறார்கள். இந்த லட்சணத்தில் 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள்ளேயே மே.வங்க கமிட்டிக்கும் நம்பூதிரிபாடு கும்பலுக்குமிடையே ஓட்டுப் பொறுக்க யார் காலை நக்குவது என்பதையொட்டிய கருத்து வேறுபாட்டினால் மௌன யுத்தமே நடக்கிறது.

வரப் போகும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ராஜீவைப் பகிரங்கமாக எதிர்த்து வீழ்த்துவதற்காக பாரதீய ஜனதா, முஸ்லிம் லீக் போன்ற வகுப்புவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேரலாம் என்பது மே.வங்க கமிட்டியின் தேர்தல் உத்தி!

எதிர்கட்சி என்ற போர்வையில் காங்கிரசுக்கு ஐந்தாம் படையாகச் செயல்பட வேண்டும் என்பது நம்பூதிரியின் தேர்தல் உத்தி! கடைசியில் நம்பூதிரியின் 'தந்திரம்' செல்வாக்கு பெற்று அவரே மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



**நம்பூதிரிபாடின் நவீன கிருஷ்ணா அவதாரம்:** தனிநபர் வழிபாட்டு மயக்கத்தில் போலிகள் மாநாட்டில் வைத்திருந்த மிகப் பெரிய கட்அவுட்

அதற்கேற்ப தமது தேசிய இனப் பிரச்சினை பற்றிய கண்ணோட்டத்தில் புதிய நயவஞ்சக அணுகுமுறைகளை வகுத்துள்ளனர். பல்வேறு தேசிய இன, மதச் சிறுபான்மையினரின் உணர்வுகள் புண்படுத்தப் படுவதால் அவர்கள் போராடுகிறார்களாம். அவர்களது கோரிக்கைகளில் சில நியாயமாக இருந்தாலும் அதை தேச ஒற்றுமையைச் சீர்குலைக்கும் பிரிவினை வாத பிற்போக்கு சக்திகள் தலைமையைக் கைப்பற்றி தவறான திசையில் இழுத்துச் செல்கின்றனவாம். எனவே போராடும் சிறுபான்மை மக்களுடன் சேர்ந்து நின்று பிரிவினை சக்திகளை முறியடித்து தேச ஒற்றுமையைக் காக்கப் போகிறார்களாம்!

இதை விட சிறப்பாக ஐந்தாம் படை வேலையை வேறு யாரால் செய்ய முடியும்? ஏற்கனவே வட கிழக்கிந்திய தேசிய இனங்களின் போராட்டத்தையும், கூர்க்கா போராட்டத்தையும் பகிரங்கமாக எதிர்த்து தேசிய வெறியர்களாக அம்பலப்பட்டுப் போயுள்ளதாலேயே இப்போது போலிகள் இப்படி நரித்தனமான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

இதோடு ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, சமீபத்தில் கேரள பல்கலைக் கழகத்தில் பைபிளைப் பாடமாக்கி கிறிஸ்தவர்களின் ஆதரவைப் பெற முயற்சிப்பதைப் போல, மதச் சிறுபான்மையினரின் கோரிக்கையை ஆதரிப்பது என்ற பெயரில் சலுகைகளை அறிவித்து ஓட்டுப் பொறுக்கவும் இந்த உத்தி பயன்படும்.

எல்லா ஓட்டுக் கட்சிகளைப் போலவே இப்போலிகள் அறிவிக்கும் கொள்கைக்கும் நடைமுறைக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதில்லை. உலக சமாதானத்துக்கும் அணு ஆயுதத் தடுப்புக்கும் மாநாட்டில் முழங்கிய போலிகள் இங்கே தமிழகத்தில் ரஷிய உதவியுடன் நிறுவப்படவுள்ள அணுமின் திட்டத்தை ஆதரித்து, போராடும் மக்களை எதிர்க்கின்றனர். அன்னிய ஏகாதிபத்திய சுரண்டலை ஒழிப்போம் என்று முழங்கிக் கொண்டே மே.வங்கத்தில் பன்னாட்டு பகாசுர கம்பெனிகள் மூலதனமிட சிவப்புக் கம்பளம் விரிக்கின்றனர்.

''உலகம் மாறும் போது கம்யூனிஸ்டுகளும் தங்களை மாற்றிக் கொள்கின்றனர்'' என்று பொருத்தமாகவே மாநாட்டில் கோரஸ் பாடுகிறார் நம்பூதிரிபாடு. உண்மைதான்! போலிக் கம்யூனிஸ்டுகளின் குருபீடமான ரஷியா முதலாளித்துவமாக மாறும் போது, ரஷிய எடுபிடிகளும் மாறித் தானே ஆக வேண்டும்! அதன்படி பொருத்தமான ரஷிய எடுபிடி முதலாளித்துவக் கட்சியாக சீரழிவதை நோக்கி 'மார்க்சிஸ்டுகள்' புது வேகத்துடன் புறப்பட்டுள்ளதையே அவர்கள் மாநாடு தெளிவாக்கியுள்ளது.

—குமார்



படிப்பகம்

www.padippakam.com

# ஓட்டுக் கட்சிகளின் பஞ்சு மிட்டாய் வாக்குறுதிகள் பங்காளி கூட்டணிகள்

பசியோடு காத்திருந்தன தெரு நாய்கள். பசி என்றால் கணிசமான காலம் பட்டினி - பசி. ஏறக்குறைய வெறி பிடிக்கும் நிலை. உள்ளே வகையான விருந்து அவற்றின் மூக்கைத் துளைத்தது. வெளியே வந்து விழவிருந்த எச்சிலையை எதிர்பார்த்து ஒன்றை ஒன்று பொறாமையோடு பார்த்து உறுமிக் கொண்டு குந்தியிருந்தன.

இதோ! இப்போது விருந்து மாளிகைக் கதவு திறந்தது. சுற்றுச் சுவருக்கு வெளியே ஒரு கத்தையாக வந்து விழுந்தன எச்சிலைகள். அவ்வளவு தான். ஒரே சமயத்தில் வெறியோடு பாய்கின்றன, தெரு நாய்கள். ஒன்றை ஒன்று கடித்துக் குதறுகிறது. பாய்ந்து பிராண்டுகிறது. காது செவிடுபடக் காட்டுக் கூச்சல் போடுகின்றன. வலுவான நாயானால் எச்சிலைகள் அத்தனையையும் மொத்தமாக வளைத்துக் கொள்ள மற்ற நாய்களை அண்ட விடாமல் உக்கிரமாகச் சண்டையிட்டு விரட்டிவிடும். இல்லையானால் கிடைத்ததை இழுத்துக் கொண்டு தனித் தனியே தின்னும். அதற்குள்ளாக நாய்ச் சண்டையின் மூர்க்கத்தை, அசிங்கத்தை அதன் உச்ச நிலையில் நாம் பார்க்கிறோம்.

இப்படித் தான்! தேர்தல் தேதி அறிவிக்கப் பட்டதும் பதவிப் பசியோடு காத்திருந்த ஓட்டுக் கட்சிகள் களத்திலே பாய்ந்து விட்டன. எச்சிலையைக் கவ்விக் கொள்வதைப் போல பதவிகளைப் பிடித்துக் கொள்வதற்காக குரூரமாக அருவெறுப்பாக, ஆபாசமாக மோதிக் கொள்கின்றன ஓட்டுக் கட்சிகள்.

பதவியைப் பிடிப்பது தான் தமிழ் நாட்டு ஓட்டுக் கட்சிகள் எல்லாவற்றின் நோக்கம். என்றாலும் இவ்வளவு வெறியோடு ஓட்டுப் பொறுக்குவதிலே, பதவி வேட்டையிலே இவர்கள் குதித்திருப்பதற்கு தனித் தனியான காரணங்களும் இருக்கவே செய்கின்றன.

ஜனதா கட்சி ஆண்ட மூன்றாண்டு இடைவெளி தவிர மத்திய அரசில் கடந்த 40 ஆண்டுகளாக பதவி சுகத்திலே மிதக்கிறார்கள் காங்கிரசு காரர்கள் காந்தீய தியாகிகள். இருந்தபோதும் அதன் தமிழகத்து நாட்டாண்மைகள் - நவாப்புகள் ஆட்சி இழந்து இருபது ஆண்டுகளாக ஏங்கி - வீங்கிப் போயிருக்கிறார்கள். திராவிடக் கட்சிகளின் தோள் மீது சவாரி செய்து ஏதோ சில எச்சிலைகளைத் தானே சுவைத்து வந்தார்கள்!

எம்.ஜி.ஆர். சாவுக்குப் பிறகு காங்கிரசாரின் நாக்கிலே எச்சில் ஒழுகுகிறது. எப்படியாவது ஆட்சியைப் பிடித்துவிட முடியும். கவர்னர் ஆட்சியிலே அரசு அதிகாரம் இருக்கிறது; பாசிச ராஜீவ் கொள்ளையடித்துக் குவித்து வைத்துள்ள ஏராளமான பணம் இருக்கிறது. அவற்றை வைத்துக் கொண்டு தமிழக மக்களை உருட்டி மிரட்டலாம்; விலைக்கு வாங்கி விடலாம் என்று நாயாய் அலைகிறார்கள். பாசிச ராஜீவை இன்னொரு எம்.ஜி.ஆராக வேஷங்கட்டி நடிக்க வைத்து தமிழக மக்களைக் கவர்ச்சிலே மயக்கி மடக்கிப் போட்டுவிட எத்தணிக்கிறார்கள்.

பாசிச ராஜீவுக்கும் தமிழகத் தேர்தல் வெற்றி ரொம்பவும் அவசியமாக உள்ளது. ஆத்தாவின் பிணத்தைக் காட்டி ஆட்சிக்கு வந்தார் பாசிச ராஜீவ். அந்த அனுதாப அலை ஓய்ந்த பிறகு நடந்த முக்கியத் தேர்தல்கள் அத்தனையிலும் மண்ணைக் கவ்வி வருகிறார். தமிழகத் தேர்தல் வெற்றி தனது அடுத்த பெரிய - பொதுத் தேர்தல் சூதாட்டத்துக்கு அச்சாரமாக இருக்காதா என்கிற ஏக்கத்திலே - நப்பாசையிலே மும்முரமாக மூப்பனாரை முடுக்கி விட்டிருக்கிறார்.

கருணாநிதி வேறு மாதிரி கணக்குப் போடுகிறார். எம்.ஜி.ஆர். சாவு, அவருடைய பாதந்தாங்கிகள் -ரசிகர்களிடையே ஏற்பட்டுள்ள பிளவு -இவற்றை வைத்தே பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, மூன்று சட்ட மன்றத் தேர்தல் தோல்விகளுக்குப் பிறகு ஆட்சியைப் பிடித்து விடலாம் என்ற பேராசையுடன் கிளம்பி விட்டார். கருணாநிதிக்கு ரொம்பவுந்தான் பதவிப் பட்டினி போட்டு விட்டார்கள் தமிழக மக்கள். பதவியின் ருசி, சுகம், சூட்சுமம், சூது அறிந்தவர் கருணாநிதி. இழந்த சொர்க்கத்தை எப்படியாவது மீட்டு விட வேண்டும் என்கிற பேராசையில் கிடந்து தவிக்கிறார்.

கருணாநிதிக்குக் கடைசி வாய்ப்பு. அரசு கட்டிலில் வீற்றிருக்கும்போது செத்தால் அரசு மரியாதையுடன் சவ அடக்கம்; அண்ணாத்துரை சமாதிக்கு அருகே ஒரு நினைவுச் சின்னம்; அதற்குள்ளாகவே மூன்று தேர்தல்களில் விட்ட கறுப்பு பணத்தைச் சுருட்டி விடலாம், பொன்னும் பொருளும் மட்டும் போதாது, பதவியையும் வாரிசுக்குச் சேர்த்து வைத்து விடவேண்டும் - இத்தனை கனவுகளையும் சுமந்து கொண்டு களத்திலே குதித்திருக்கிறார் கழகத்தின் கருணாநிதி!

எம்.ஜி.ஆருக்கு மூன்றாவது, நான்காவது மனைவியாகவோ வைப்பாட்டியாகவோ இருந்தவர்கள் ஜானகியும் ஜெயலலிதாவும்.

முதலாவது எடுபிடியாக இருந்தவர் வீரப்பன். சமீப காலம் வரை ஓராண்டுக்கு முன்பு வரை பதவி சுகத்திலே தின்று கொழுத்தவர்கள். எம்.ஜி.ஆர். 'தேடி' வைத்து விட்டுப் போன கோடி கோடியான கருப்பு பணம் - லஞ்சப் பணத்தைக் காத்துக் கொள்வதற்காக பதவி -அதிகாரம் அவசியமாக உள்ளது என்று சக்களத்திச் சண்டையிலே இறங்கி விட்டார்கள். இவர்களைப் பினாமிகளாக வைத்து அதிகாரத்தைப் பிடித்து விடத் துடிக்கிறார்கள் சாராய முதலாளிகள், வட்டிக்கடை - அரிசிமண்டி - பஸ் லாரி -சினிமா அதிபர்கள்.

பதவி எச்சிலைக்கு இந்த ஓட்டுப் பொறுக்கிகள் போடும் நாய்ச் சண்டையைப் பார்த்து நாடே கை கொட்டிச் சிரிக்கிறது. இருந்தாலும் அதையெல்லாம் ஒருபுறம் நடத்திக் கொண்டே இவர்கள் ஏதோ மக்களது நன்மைக்காகத் தான் இத்தனை பாடுபடுகிறார் என்பதாக நடிக்கிறார்கள். இந்தப் பித்தலாட்டத்தின் ஒரு பகுதியாக, முக்கிய மோசடியாக இந்த ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் ஒவ்வொன்றும் தேர்தல் அறிக்கைகள் வெளியிட்டு இருக்கின்றன.

ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் புளுகும் திறமை; ஓட்டுப் போடும் மக்களின் அறியாமை, மறதி - ஆகியவைகள் தான் அவர்களின் கொள்ளையடிப்பதற்கான சூதாட்டம், தொழிலின் மூலதனம் என்பதை இந்தத் தேர்தல் அறிக்கைகள் காட்டுகின்றன. எதைச் சொல்லியும் மக்களை மடையர்களாக்கி விட முடியும் என்கிற திமிர், எல்லா வகையிலும் மக்களைக் கேவலப்படுத்தும் முயற்சி இந்த அறிக்கைகளிலே தெரிகிறது. பதவி எச்சிலையைக் கவ்விக் கொள்வதைத் தவிர வேறு எந்த அரசியல், பொருளாதார மற்றும் பிற கொள்கை அடிப்படையிலான வேறுபாடுகள் இந்த ஓட்டுப் பொறுக்கிகளுக்குள்ளே கிடையாது என்பதையும் அவர்கள் கூறிவிட்டார்கள்.

பெரிய ஆலை அதிபர்களில் இருந்து ஏழை எளியவர்கள் வரை சமூகத்தின் அத்தனை பேருக்கும் கவர்ச்சிகரமான திட்டங்கள் நான்கு பெரிய கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளிலும் நிரம்பி வழிகின்றன. பெண்கள், பிற்பட்ட -தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள், வேலையில்லாதவர்கள், முதியவர்கள், சிறுவர் - குழந்தைகள், சகல



படிப்பகம்

www.padippakam.com

பிரிவு தொழிலாளர்கள், கிராமப்புற ஏழைகள் -பாமரர்கள் அத்தனை பேர் மேலேயும் இந்த ஓட்டுப் பொறுக்கிகளுக்கு அக்கறை ஆறாகப் பெருகி ஓடுகிறது.

✱ ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தருவேன் என்கிறது ஜானகி - வீரப்பன் கும்பல். அது சாத்தியமில்லை. ஒரு கிலோ அரிசி ஒன்றே முக்கால் ரூபாய்க்குத் தருகிறேன் என்கிறது ஜெயலலிதா கும்பல். குடும்பத்திற்கு குறைந்த பட்சம் 20 கிலோ அரிசி ரேஷனில் தருவேன் என்கிறது பாசிச ராஜீவ் கும்பல். ஏழைகளுக்கு இலவச வேட்டி சேலை, பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, தீபாவளி நாட்களில் 5 கிலோ இலவச அரிசி தருவேன் என்கிறது கருணாநிதி கட்சி.

"மூன்றுபடி லட்சியம், ஒருபடி நிச்சயம்," "ரூபாய்க்கு ஒரு படி அரிசி" என்று சொல்லி ஆட்சிக்கு வந்த அண்ணா துரை மோசடிபோலஅவுன்சுக் கணக்கில் அரிசிக்கு ரேஷன் கொண்டு வந்தார் காமராஜர் என்




பதை மக்கள் மறந்து விட்டார்கள் என்கிற தைரியத்தில் அவர்களுடைய வாரிசுகள் புளுகுகிறார்கள்.

✱ சிறு விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வேன் என்கிறது ஜானகி -வீரப்பன் கும்பல். அவர்களின் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்வதோடு மின் கட்டணப் பாக்கிக்கான வட்டியையும் ரத்து செய்வேன் என்கிறது கருணாநிதி கட்சி. கடன்களை ரத்து செய்வதோடு இலவசமாகவே மின்சாரம் தருவேன் என்கிறது ஜெயலலிதா கும்பல். 15 கோடி ரூபாய் தக்காவிக் கடனை ரத்து செய்வதோடு குத்தகை விவசாயிகளுக்கு மேலும் 50 கோடி கடனளிப்பதாக வேறு வாக்குறுதி தருகிறது பாசிச ராஜீவ் கும்பல்.

கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஆட்சியிலே இதே கோரிக்கைகளுக்காக விவசாயிகள் போராடிய போது சுட்டுக் கொல்லப் பட்டார்கள். உத்திரப் பிரதேசம் உட்பட காங்கிரசு ஆளும் மாநிலங்களிலும் இந்த நிலைமை தான். இந்தக் கோரிக்கைகளுக்காக டெல்லியிலே பேரணி நடத்த வந்த விவசாயிகளைச் சமீபத்தில் சுட்டுக் கொன்று அடக்க முயன்றது பாசிச ராஜீவ் கும்பல். இதையெல்லாம் விவசாயிகள் மறந்து விடுவார்கள் என்கிற தைரியத்திலே இந்த ஓட்டுப் பொறுக்கிகள் புளுகுகிறார்கள்.

✱ நலிவுற்ற ஆலைகளைத் திறப்பது; பீடி, தீப்பெட்டி, தோல், பாய் முடைதல், கல்லுடைப்போர், மீனவர், நெசவாளர்கள், சைக்கிள் - ஆட்டோ போன்ற சகல பகுதி தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கும் உத்திரவாதம் அளிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். இப்படியே வாக்குறுதி அளிக்கிறது ஜெயலலிதா கும்பல். இதற்கும் ஒருபடி மேலே போய் இத் தொழிலாளர்கள் இறந்து போனால் 5000, 10000, 15000 என்று கருணைத் தொகை அளிப்பதாகக் கூறுகின்றன கருணாநிதி கட்சி மற்றும் ஜானகி வீரப்பன் கும்பல்.

இவையெல்லாம் ஏற்கனவே கூறப்பட்ட ஆசை வார்த்தைகள் தாம். தேர்தல் முடிந்ததும் காற்றோடு கரைந்து போனவை தாம். பத்தாண்டுகளுக்கு முன்பு பிரபலமான எம்.ஜி.ஆர். தேர்தல் பிரச்சார உரையிலேயே பார்க்கலாம். கருணைத் தொகை என்பது தொழிலாளர்களை மறைமுகமாகச் சுரண்டும் ஒரு காப்பீட்டுத் திட்டம் தான். மக்கள் மறந்து விட்டார்கள், அறியாதவர்கள் என்கிற தைரியத்தில் அவிழ்த்துவிடும் புளுகு மூட்டைகள்.

✱ அரசு வேலையில் பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு மற்றும் பிற மேம்பாட்டுத் திட்டங்களை முழங்குகிறது பாசிச ராஜீவ் கும்பல். ஷாரியத் முதலிய பிற்போக்குச் சட்டங்களையும் சதி முதலிய பழைமை கொடிய பழக்கங்களையும் தூக்கிப் பிடிக்கும் பாசிச ராஜீவ் கும்பலின் பித்தலாட்டம் 30 சதவிகித இட ஒதுக்கீடும், எட்டாம் வகுப்புப் படித்த ஏழைப் பெண்களுக்கு 5000 ரூபாய் திருமணச் செலவு தொகையும் தருவதாகக் கூறுகிறது தி.மு.க. தாலிக்குத் தங்கம் கொடுப்பதாகச் சொல்லி கடந்த தேர்தல்களில் ஜெயித்தவர்கள் இப்போது செலவு தொகை தருவதாகச் சொல்லிப் புளுகுகிறார்கள். சொத்திலே சமபங்கு, வேலை வாய்ப்புகள், குழந்தை நலம் குடும்ப நலம் ஆகிய திட்டங்களை அறிவித்துள்ளது ஜெயலலிதா கும்பல். இவற்றோடு பெண்களுக்குத் தொழில் வசதியும் விதவைகளுக்கு மானியமும் தருவதாகக் கூறுகிறது ஜானகி -வீரப்பன் கும்பல். வாக்காளர்களில் பாதிப் பேரான பெண்களை ஏய்ப்பதற்கான தூண்டில் தீனிகள் தாம் இவை.

✱ ஆண்டுக்கு ஒரு லட்சம் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதாகக் கூறுகிறது தி.மு.க. ஐந்தாண்டுகளில் 25 லட்சம் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதாகக் கூறுகிறது காங்கிரசு. வேலையில்லாத இளைஞர்களுக்கு கருணைத் தொகை வழங்குவதாகக் கூறுகின்றன ஜானகி, வீரப்பன் மற்றும் ஜெயலலிதா கும்பல்கள். வேலையில் சேர்ப்பதற்கான வயது வரம்பை உயர்த்துவதாக இந்த ஓட்டுக் கட்சிகள் வாக்குறுதி அளிக்கின்றன. வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கான உருப்படியான திட்டம் எதுவுமே இல்லாமல் வாய்ப்பந்தல் போடுகின்றன.

✱ புதிய வரிகளை விதிக்க மாட்டோம்; மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதிய விகிதம் அளிப்போம். அரசு செலவுகளைக் குறைத்து பணத்தை மிச்சப்படுத்தி வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடுவோம் என்று உறுதி கூறுகிறார்கள். யார்? தம்முடையே ஆட்சியில் போராடும் அரசு ஊழியரை அடக்கி ஒடுக்குபவர்கள். அரசுப் பணத்தை உல்லாச ஊதாரிகளாகச் செலவு செய்யும் ஓட்டுப் பொறுக்கிகள்.

✱ கல்வி, வேலை வாய்ப்பு, நீர்ப்பாசனம், மின்சாரம், தொழில் வளர்ச்சி, தாழ்த்தப்பட்டவர்கள் - மலைவாழ் மக்கள் நலன்கள், குடி தண்ணீர், மருத்துவ வசதி மற்றும் பிற அடிப்படைத் தேவைகள், சத்துணவுத் திட்டம், ஊனமுற்றோர் மறுவாழ்வு, முதியோர் ஊதியம், ஏழைகளின் திருமணச் செலவு, இலவச வீடு இப்படி ஆயிரக்கணக்கான திட்டங்களை இந்தக் கட்சிகள் அனைத்தும் அடுக்கிக் கொண்டே போகின்றன. இவற்றைச் சாதிப்பதற்கான வழிவகைகள் எதுவுமே கிடையாது. எனவே அத்தனையும் ஓட்டுப் பொறுக்குவதற்கான மோசடி!

✱ தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிக் கொள்கையையும் தமிழ் மொழி முன்னேற்றத்தையும் வலிந்து வலிந்து வாக்குறுதி தருகிறார்கள், இந்த ஓட்டுப் பொறுக்கிகள். இந்தி திணிப்பு, இன ஒடுக்குமுறையின் மொத்த உருவான பாசிச ராஜீவ் கும்பல், அதோடு சேர்ந்து கொண்டு இந்தி எதிர்ப்பாளர்கள் மீது அடக்குமுறைகளை ஏவிய எம்.ஜி.ஆர். வாரிசுகள், காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ளபோது இந்தித்

www.padippakam.com




இந்தியன் எக்ஸ்பிரஸ் கருத்துப் படம்

திணிப்பைக் கண்டு கொள்ளாமல் நழுவிக் கொண்ட கருணாநிதி கட்சி - இவர்கள் தான் மொழியின் முன்னேற்றம் பற்றி வாக்குறுதித் தருகிறார்கள்.

* சந்து பொந்துகளில் எல்லாம் சாராயத்தை ஆறாக ஓடவிட்ட கழகத்தவரும், காங்கிரசு காந்தீயவாதிகளும் மது விலக்கை தீவிரமாக அமுலாக்கப் போவதாகச் சொல்லி ஓட்டுப் பொறுக்கி வருகிறார்கள்.

* உள்ளூராட்சி அமைப்புகளைக் கலைத்த கருணாநிதி அவற்றுக்குத் தேர்தலே நடத்தாது இழுத்தடித்துவிட்டு, தேர்தல்களிலே தோல்வி கண்ட பிறகு உள்ளூராட்சி ஆட்சி அமைப்புகளின் அதிகாரத்தைப் பிடுங்கிய எம்.ஜி.ஆரின் வாரிசுகள்; மாநில அரசுகளின் அதிகாரத்தைப் பிடுங்கிக் கொண்டதோடு, உள்ளூராட்சித் தேர்தல்களே நடத்தாமல் மாநிலங்களை ஆளும் பாசிச ராஜீவ் கும்பல் ஆகிய இந்த ஓட்டுப் பொறுக்கிகள், அதிகாரத்தைப் பரவலாக்குவது, உள்ளூராட்சி அமைப்புகளை பலப்படுத்துவது என்று வாய் சவடால்கள் அடிக்கின்றன.

* எல்லாவற்றுக்கும் மேலாக லஞ்ச ஊழல். நேரு பரம்பரையின் பழைய லஞ்ச ஊழல்களை மக்கள் மறந்து போயிருப்பார்கள். ஆனால் பாசிச ராஜீவின் ஃபேர் பாக்ஸ், போஃபர்ஸ், ஊழல் நாற்றம் நாடே நாறுகிறது. இருந்த போதும் லஞ்ச ஊழலே இல்லாத தூய்மையான ஆட்சி அமைக்கப் போவதாக பெருங் கூக்குரல் போடுகிறது பாசிச ராஜீவ் கும்பல். வீராணம் ஊழல், அரிசி - கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து ஊழல் ஆகியவற்றின் நாயகன் கருணாநிதியும் ஊழலற்ற ஆட்சி அமைக்கப் போவதாகக் கூறுகிறார். புகார் கூறுபவர்களையே தண்டிக்கும் சட்டம் கொண்டு வந்த கருணாநிதி, ராஜீவ் ஆகியோர் ஊழல் விசாரணைக்கான சட்டங்களும் அமைப்புகளும் கொண்டு வரப் போவதாக வாக்குறுதி கூறுகின்றனர். தேர்தல் சீட்டுக்குத் தனது கட்சிக்காரர்களிடமே லஞ்சம் வசூலிக்கும் ஜெயலலிதா, தேர்தல் நிதியிலேயே கையாடல் செய்யும் ஜெயலலிதா கும்பலின் பிரதான வாக்குறுதியே ஊழலற்ற, தூய்மையான ஆட்சி அமைப்பது தானாம். எரி சாராய ஊழல், பஸ் ரூட் லஞ்சம், சுயநிதிக் கல்லூரி ஊழல் - இப்படி கோடி கோடியாக எம்.ஜி.ஆர். கொள்ளையடித்த சொத்துக்களை வாரிசுரிமையாகப் பெற்ற ஜானகி - வீரப்பன் கும்பல் எம்.ஜி.ஆரின் ஊழலற்ற ஆட்சி அமைக்குமாம்.

தமிழகத் தேர்தலில் குடுமிப்பிடிச் சண்டையில் குதித்துள்ள நான்கு பெரிய கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள் மீது ஒரே ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்தும் எவரும் கூறி விட முடியும். எல்லாம் பித்தலாட்டம், மோசடி, வாய்ச்சவடால்; இவை எதுவும் நிறைவேறுவதற்கானவை அல்ல - ஓட்டுப் பொறுக்குவதற்கான வெறும் கவர்ச்சி - இலவச - ஏமாற்றுத் திட்டங்கள்.

இந்தத் தேர்தல் அறிக்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் எவரும் சர்வ சாதாரணமாகக் கூறிவிட முடியும். இவர்கள் பதவியைப் பிடிப்பதற்காகத் தான் பிரிந்து தனித் தனியே போட்டி போடுகிறார்கள். தனித் தனிக் கட்சிகள் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் கூட கிடையாது. ஒரே ஒரு முதல்வர் பதவி தான் இருக்கிறது. நான்கு முதல்வர்கள் சமமான தகுதியிலே பிரித்துத் தரப்படும் என்றால் இந்த நாய்ச் சண்டை தேவையில்லாமல் போய்விடும்.

பதவி வெறி தவிர, அதைக் கொண்டு கொள்ளையடிப்பதைத் தவிர வேறு கொள்கையோ, கோட்பாடோ, லட்சிய வேறுபாடோ இல்லாதவர்கள் என்பதால் தேவையானபோது தேசியம், திராவிடம் எல்லாத்தையும் மூட்டை கட்டி வைத்துக் கொள்கிறார்கள். மாறி மாறி வசதிக்கேற்ப சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேர்ந்து கொள்கிறார்கள். கடந்த ஓராண்டாக இந்த ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளுக்கிடையே நடந்த தேர்தல் கூட்டணிப் பேரங்கள், இவர்களின் அரசியல் விபச்சாரத்தை படம் பிடித்துக் காட்டிவிட்டன.

எம்.ஜி.ஆர். சாவைத் தொடர்ந்து அவரது சொத்து, கட்சி, ஆட்சி ஆகியவற்றை வாரிசுரிமையாகப் பெறுவதற்காக ஜானகி - வீரப்பன் கும்பல் ஒருபுறமும், ஜெயலலிதா கும்பல் மறுபுறமும் நின்று நடத்திய சக்களத்திச் சண்டை - ஊரறிந்த விபச்சாரிகளின் குழாயடிச் சண்டையிலும் ஆபாசமாக இருந்ததை உலகமே கண்டு களித்தது. அந்தச் சண்டையிலே தலையிட்டு பஞ்சாயத்துக்காரனைப் போல பகல் வேஷம் போட்டு கொல்லைப்புற வழியே ஆட்சியைப் பிடித்துவிட முயன்றபோது மூப்பனார் - ராஜீவ் கும்பலின் முகத்திரை கிழிந்தது. இருந்தபோதும் மத்திய அரசு அதிகாரம் - கவர்னர் ஆட்சி ஆகியவற்றை முறைகேடாகப் பயன்படுத்தி, பணத்தை வாரி இறைத்து, கூலிப் பிரச்சாரகர்கள் சினிமா நடிகர் - நடிகைகள், ஜாதி-மத சக்திகள், அரசியல் பிழைப்புவாதத் திமிர்த் தலைவர்கள், ராஜீவ் - சோனியாவின் வெள்ளைத் தோல், எம்.ஜி.ஆர். -ஜெயலலிதா பாணி நடிப்பு கவர்ச்சி ஆகியவற்றை வைத்து தமிழகத்தில் பெரும் சக்தியாக காங்கிரசை வளர்த்துவிட முடியும் என்று குதியாட்டம் போட்டார்கள்.

இதனால் ஊதிப் பெருக்கப்பட்ட பிரமையைக் காட்டி, உருட்டி மிரட்டி எம்.ஜி.ஆர். கட்சிப் பிரிவுகளை மடக்கி ஆதிக்கத்தை நிறுவிவிட முயன்றார்கள். தேர்தலுக்கு முன்னமேயே முதல்வர் நாற்காலிக்காக நடந்த பேரங்களில் கூட்டு முயற்சிகள் எல்லாம் முறிந்து போயின. ஜெயலலிதாவுடனும், வன்னியர் சங்கத்துடனும் பாசிச ராஜீவ் - மூப்பனார் கும்பல் நடத்திய இரகசிய - கள்ள பேரங்கள் தோற்ற போது அதன் கனவுகள் தவிடுபொடியாகின.

மூப்பனாா குமபல் நடத்திய அரசியல் பேரங்களிலே அதன் தரகர்களாக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன், மக்கள் குரல் டி.ஆர்.ஆர், நெடுஞ்செழியன் ஆகியோர் மிகக் கேவலமான முறையிலே அம்பலப்பட்டுப் போனார்கள். போலிக் கம்யூனிஸ்டு த.பாண்டியன், முஸ்லீம் லீக் அப்துல் சமது ஆகிய சில்லறைத் தரகர்களே அவர்கள் அணியிலே எஞ்சியவர்கள்.

எம்.ஜி.ஆர். வாரிசுகளுக்கிடையே நடந்த சக்களத்திச் சண்டை, ராஜீவ் -மூப்ப

படிப்பகம்

www.padippakam.com

ளார் கும்பலின அரசியல் விபச்சாரம் ஆகியவற்றை தாமே பறித்து கொண்டு தமிழக மக்களுக்கு வேறு நாதியில்லை என்கிற நிலையில் ஆட்சிப் பழம் கனிந்து தன் மடியிலே விழும் என்று மடியை விரித்து வைத்துக் காத்திருக்கிறார் கருணாநிதி. கண்ணியமான அரசியல்வாதி என்கிற கபட வேஷம் போடுகிறார். ஜானகி -ஜெயலலிதா சக்களத்தி சண்டை ஆபாச அரசியலுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல கருணாநிதியின் பின்னணி. சம்பத்தும் கண்ணதாசனும் பிரிந்தபோது வெளியிட்ட ''வனவாசம்'' திராவிடர் கட்சிகளின் ஒழுக்கக் கேட்டின் வரலாறு சொல்லும். அண்ணாத்துரை சாவுக்குப் பிறகு நடந்த கருணாநிதி - நெடுஞ்செழியன் பதவிச் சண்டை, எம்.ஜி.ஆரை கட்சியில் இருந்து நீக்கி விட்டு கருணாநிதி நடத்திய சட்டமன்ற ரௌடித்தனம் எல்லாம் பழங்கதை. 1981 சட்டமன்ற - நாடாளுமன்ற தேர்தல்களில் இந்திரா கட்சியுடன் பாதிபாதி இடங்களுக்குக் கூட்டுச் சேர்ந்தார் கருணாநிதி; அப்போது முதல்வர் பதவிக்கான பேரத்தை ஜெயலலிதா - ராஜீவ் பாணியிலே நடத்தி கூட்டு முறிவு வரை போனதும் கூட பழைய கதை.

அதெல்லாம் மக்கள் மறந்து விட்டார்கள் என்கிற நம்பிக்கையிலே, கருணாநிதி தனது சூழ்ச்சி, தந்திரம், சந்தர்ப்ப வாதத்தையே ராஜதந்திரமாக - கொள்கை -அரசியலாகச் சித்தரிக்கிறார். எதிர்த்தரப்புகளின் கூட்டணி - தேர்தல் அறிக்கை ஆகியவற்றை எகத்தாளமாக ஏளனம் செய்கிற கருணாநிதியின் யோக்கியதை என்ன? மூன்று மாதங்களுக்கு முன்பு ''சென்னையைக் குலுக்கும்'' பேரணி நடத்தி தேசிய முன்னணி துவக்கினார். அது கருணாநிதியின் சுய விளம்பரத்தோடு முடிந்தது. தேசிய முன்னணிக்கென்று ஒரு கொடி, ஒரு 45 அம்ச கொள்கை அறிக்கை, ஒரு அமைப்பு விதி எல்லாம் நிறைவேற்றினார்களே! அவையெல்லாம் எங்கே?

தேர்தல் என்று வந்தவுடன் தேசிய முன்னணியைக் கிடப்பில் போட்டுவிட்டு, அதிலே அங்கம் வகிக்காத போலிக் கம்யூனிஸ்டுகள், முஸ்லீம் லீக்குகளுக்கு சில சீட்டுக்களைப் பிச்சை போட்டு கூட்டணி பேரத்தை முடித்துக் கொண்டார், கருணாநிதி. இறுதி நேரத்திலே பத்துச் சீட்டுக்களைப் பிச்சை போட்டு ''தேசிய முன்னணி''யைக் காப்பாற்றிவிட்டார். ஈழத் தமிழருக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் கருணாநிதி, இலங்கை மீது படை எடுத்ததையும், ஈழத் தமிழரைக் கொன்றதையும் முழுமூச்சாக ஆதரிக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளுடன் கூடிக் கொள்கைக் கூட்டு அமைத்திருப்பதாகக் கூறுகிறார்.

''முதலாளித்துவக் கட்சிகளைப் போன்றவர்கள் அல்ல நாங்கள்; கொள்கையும் கோட்பாடும் வைத்திருக்கிறோம்'' என்று பீற்றிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளும் மற்ற பிற எச்சிலைக்கு அலையும் தெரு நாய்களைப் போன்றவர்கள் தாம் என்பதைக் காட்டி விட்டார்கள். நேரு குடும்பத்தின் அரசியல் மாமா டாங்கேயின் தமிழ்நாட்டு தளபதி த.பாண்டியன் ராஜீவ்_மூப்பனார் கும்பலுக்கும், ஜெயலலிதாவுக்கும் தரகு வேலை பார்த்தார். அதற்குத் தரகுத் தொகையாக சில லட்சம் ரூபாயும் சில தொகுதிகளும் தேடிக் கொண்டார்.

திருவனந்தபுரத்திலே கூடிய போலி மார்க்சிஸ்டுக் கட்சிப் பேராயமும், டில்லியிலே கூடிய போலிக் கம்யூனிஸ்டு தேசிய கவுன்சிலும் ஏகோபித்த குரலில் கூறின. இடது சாரி ஜனநாயக சக்திகளின் ஐக்கியம் தான் தேசிய மாற்று; தேசத்துக்கு ஒரே தீர்வு -வழி! ஆனால் அவர்களின் செயல் என்ன? இங்கே மூன்று சீட்டுகளுக்கு அவர்களுக்கிடையே நடந்த சண்டையில் இடதுசாரி ஜனநாயக ஒற்றுமையை நார் நாராகக் கிழித்து விட்டார்கள். கொள்கை பேசி- கவர்ச்சி எதிர்ப்பு நாடகமாடிய மாணிக்கம் கும்பல் ஜெயலலிதா முந்தானையைப் பிடித்துக் கொண்டு போனது. கிடைத்தவரை லாபம் என்று கருணாநிதியின் காலிலே விழுந்து கும்பிடு போட்டது நல்லசிவம் கும்பல். அது முழு மூச்சாக எதிர்ப்பதாகக் கூறும் மதவாத முஸ்லிம் லீக்குடன் கருணாநிதி கூட்டு வைத்திருப்பது; ஈழப்பிரச்சினையில் எதிரான கொள்கை அறிவிப்பு செய்துள்ளது எதுவுமே தெரியாதவாறு கவிழ்ந்து விழுந்து கும்பிடு போடுகிறது.

ஆக, தெளிவாக அறுதியிட்டுச் சொல்லலாம். பதவி எச்சிலையைச் சப்பிக் கொள்வதற்குப் பாயும் தெரு நாய்களைப் போலத்தான் விதிவிலக்கின்றி இந்த ஓட்டுக் கட்சிகள் தேர்தல் களத்திலே் பாய்ந்துள்ளன. தேர்தல் காலத்திலே இவர்கள் வெளியிடும் ''கொள்கை -லட்சிய'' தேர்தல் அறிக்கைகள் போட்டி போட்டுக் கொண்டு மோசடி செய்வதற்கான ஒரு வாய்ப்பாகவே அவை கருதுகின்றன. தேர்தல் காலக் கூட்டணி என்பது கூட்டுக் கொள்ளைக்கா பங்காளிகளை வசதிக்கேற்ப தெரிந்தெடுத்துக் கொள்வதாகவே அவை செயல்படுகின்றன.

இந்தப் பித்தலாட்டக் காரர்களிலே இந்தக் கூட்டுக் கொள்ளைக்காரர்களிலே குறைந்த பட்சம் தகுதியானவர்கள் மக்களுக்காகப் பாடுபடுவார் என்று கணித்துத் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் எவருமே கிடையாது. ஜனநாயகத்தின் தூண்களாகச் சொல்லிக் கொள்ளும் பத்திரிகைகள்; ஜனநாயகத்தின் சேவகர்கள் - காவலர்களாகச் சொல்லிக் கொள்ளும் ஓய்வு பெற்ற - ஒதுங்கி நிற்கும் பெரிய மனிதர்கள் ஆகிய அத்தனைபேரும் இப்போது இதை ஒத்துக் கொள்கிறார்கள். ''இருந்தாலும் ஓட்டுப் போடாமல் இருக்க முடியாது. அது நமது உரிமை. எனவே இருப்பவர்களிலே குறைந்தபட்சம் நல்லவர்கள், தகுதியானவர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுங்கள்'' என்று வேண்டுகோள் விடுகின்றார்கள்.

''இது ஏதோ அரசியல் கட்சிகளின் தரம் வீழ்ந்து போனதால் நேர்கிறது; தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் அறிவு - பக்குவம் மக்களுக்கு இல்லாததால் நேர்கிறது'' என்று சொல்லி சில சீர்திருத்த யோசனைகளை முன் வைக்கிறார்கள். ஓட்டுக் கட்சிகளின் எண்ணிக்கையைக் குறைத்து இரு கட்சி ஆட்சி முறை காண்பது; தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் ஒப்பந்த முறிவு செய்துவிட்டதாகத் தண்டிப்பது உட்பட பதவிகளைப் பறிப்பது போன்ற சட்டபூர்வத் தீர்வுகளைச் சொல்லுகிறார்கள்.

நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயக ஆட்சி முறையே தோற்றுப் போய்விட்டது. சீர்திருத்தச் சட்டங்களை நிறைவேற்றுவதால் அதை மாற்ற முடியாது. அந்த ஜனநாயகத்தின் பிறப்பிடம் - வாழ்விடமாக சித்தரிக்கப்படும் மேற்கத்திய நாடுகளிலேயே அது அழுகி நாறுகிறது. கடந்த ஆண்டு இத்தாலியில், ஒரு நடிகை - விபச்சாரி நிர்வாண ஊர்வலமாகப் போய் ஓட்டு வாங்கி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகவில்லையா? ஆபாச வாழ்க்கை அம்பலப்பட்டுப் போன பிறகு, குடியரசுக் கட்சிக்கான ஜனாதிபதி வேட்பாளர் விலக்கிக் கொள்ளப்படவில்லையா? அமெரிக்கத் தேர்தலில் போட்டி போட்டுக் கொண்டு கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து வெற்றி பெற டுகாகிசும் புஷ்ஷும் முயலவில்லையா?

முதலாளித்துவ நாடாளுமன்ற -சட்டமன்ற ஜனநாயகத்தின் தர்க்க ரீதியான - இழிந்த இறுதிநிலை இப்படித்தான் இருக்கும். அது பாசிஸ்டுகளையும், குரூர -கோமாளிகளையும் தனது அரசியல் தலைமையாகத் தேடிச் சரணடைவது தவிர்க்க முடியாது! தரகு அதிகார முதலாளிகள் நிலப் பிரபுக்களின் அதிகார வர்க்க - இராணு ஆட்சியை மூடி மறைத்து நீண்ட காலம் ஜனநாயக வேஷம் போடுவதற்கு தேர்தல் முறைகள் எதுவும் உதவாது. ஒன்று அவர்களாகவே நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல் முறைகளுக்கு சமாதி கட்டிவிட்டு அப்பட்டமான சர்வாதிகாரத்தை, பாசிச / இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவுவார்கள். அல்லது பரந்துபட்ட மக்கள் இந்த ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் நாடாளுமன்ற -சட்டமன்ற - ஜனநாயக அமைப்புகள் அத்தனையோடும் அதிகாரவர்க்க -இராணுவ ஆட்சிக்கு சமாதி கட்ட வேண்டும். அதற்கான தருணம் நெருங்கி வருவதையே ஓட்டுக்கட்சிகளின் சீரழிவுகள் காட்டுகின்றன.

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**


*தவிர்க்க இயலாத காரணங்களால் 1—15 ஜனவரி'89 இதழை உரிய நேரத்தில் வெளியிட இயலவில்லை. எனவே 16—31 ஜனவரி'89 இதழையும் சேர்த்து ஒரே இதழாக இவ்விதழை வெளியிட்டுள்ளோம். இதுபற்றி உங்களிடம் முன்கூட்டியே அறிவிக்காதது தவறு என்பதை உணர்ந்து சுய விமர்சனம் ஏற்கிறோம்.*


*— ஆசிரியர் குழு.*

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ் மதியழகன், 21, பாலாஜி சிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. அச்சிடுபவர்: எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-எ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 024.

படிப்பகம்

www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

டெல்லி– மயூரா செராட்டன், ஹாட்ரிகன்சி, தாஜ்மகால், அசோகா போன்ற பன்னாட்டு சங்கிலித் தொடர் ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் நடக்கும் அதன் வாடிக்கையாளர்களின் ஆடம்பரத் திருமண வரவேற்பு விருந்து மண்டபம் இது.

மாதவராவ் சிந்தியா போன்ற அரச பரம்பரையில் வந்த காங்கிரசு மத்திய மந்திரிகள், குவாலியர் ராணி போன்ற பாரதீய ஜனதாக் கட்சியின் முதல் மட்ட தலைவர்கள், வி.பி.சிங் கட்சியின் அருண்நேரு போன்ற வலது கரங்கள் இன்னும் மேல் மட்ட அதிகார தரகர்கள், அரசு காண்ட்ராக்ட் முதலாளிகள், ஆட்சியிலிருக்கும் ஓட்டுப் பொறுக்கிகள் என்று ஆட்சியதிகாரத்தை அடி முதல் நுனி வரை சுவைக்கும் ஓட்டுண்ணி கூட்டங்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களுக்காக நடத்தும் திருமண வைபவத்தின் ஒரு சில காட்சிகள் இவை.

திருமண வரவேற்பு, விருந்து என்ற பெயரில், ஒரு அறைக்கு நாளொன்றுக்கு பல ஆயிரங்களை வாடகையாக வசூலிக்கும் இந்த ஐந்து நட்சத்திர ஓட்டல்களை அப்படியே மொத்தமாக பல வாரங்களுக்கு வளைத்துப் போட்டுக் கொள்கிறது இக்கூட்டம். இதற்காகும் வாடகை செலவே பல லட்சங்கள்! இன்னும் மேற்கொண்டு பல லட்சங்கள் செலவு செய்து ஐந்து நட்சத்திர ஓட்டல்களை தங்களுக்குப் பிடித்தமான இயற்கை சூழலாக மாற்றுகின்றனர். பெரும் வானாந்திரங்கள் போல், நீண்ட பாலைவனத்தின் நடுவே இருக்கும் சோலை போல், மேற்கத்திய நாடுகளிலிருந்து தம் சொந்தச் செலவில் தருவிக்கப்பட்ட அதி நவீன மின்னணு சாதனங்களினால் ஒலி - ஒளி காட்சி முறையில் இவற்றை உருவாக்குகின்றனர். மேலும் தத்ரூபமாக இருப்பதற்கு யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள் ஓட்டல்களுக்கு கொண்டு வரப்பட்டு உலாவ விடப்படுகின்றன. உலகத்தின் அனைத்து நாட்டு உணவு வகைகள், உதாரணத்திற்கு ஒரு விருந்துக்கு 120 வகையான உணவுப் பண்டங்களை ருசி பார்க்கிறது இக்கூட்டம். ''காட்டுக்குள்ளே திருவிழா'', ''அராபிய இரவு'' என்று பெயர் சூட்டப்படும் இத்திருமணங்களில் அராபிய 'பெல்லி' நடனத்திலிருந்து மேற்கத்திய 'பிரேக் டான்ஸ்' வரை வாடகைக்கு அமர்த்தப்பட்ட பெண்களை ஆடச் சொல்லி ரசிக்கின்றனர். திருமண அழைப்பிதழுடன், மணமகன் - மணமகள் பெயர் பொறித்த தங்க நாணயங்களை, குங்கும சிமிழ்களை இலவசமாக கொடுப்பது, உலகத்தின் பல பாகங்களிலிருக்கும் விருந்தினர்கள் வந்துபோக விமான டிக்கெட்டுகளை இலவசமாக அனுப்புவது என்று கறுப்பு பணத்தை காட்டாற்று வெள்ளம் போல் செலவழிக்கின்றனர். ஏறக்குறைய ஒரு நாளைக்கு 15,000 பேர் என தொடர்ந்தாற்போல் நான்கு நாட்களுக்கு 60,000 பேர்களுக்கு ஐந்து நட்சத்திர வரவேற்பு - விருந்து கொடுத்த கூட்டம் கூட இந்த பட்டியலில் உண்டு.

இதோ, இந்த பெண் உழைப்பாளியை, பால் மணம் மாறாத அவருடைய குழந்தையை பாருங்கள்! நெஞ்சு கொதிக்கிறது! சரியாக நடை பயிலுவதற்கு முன்னரே கழுத்தொடியும் அளவுக்கு தலைச்சுமை தூக்கி வயிற்றை கழுவ வேண்டிய நிலைமை! வார்த்தையில் விவரிக்க முடியாத அளவு வாழ்நாள் முழுவதும் சோகத்தை சுமந்து சாகும் கொடுமை!

நாட்டை நிர்மாணிக்கும் உழைக்கும் மக்களுக்கோ இறுதி மூச்சுவரை அற்ப கூலி, அடிமை வாழ்வு! நாட்டைச் சுரண்டி வாழும் ஒட்டுண்ணி கூட்டத்திற்கோ இறுதி மூச்சு உள்ளவரை மூச்சு முட்டுமளவு சுகபோக உல்லாசம்! இந்த ஒட்டுண்ணி கூட்டத்தை நாம் வெட்டிச் சாய்ப்பது எப்போது?



படிப்பகம்